# இலங்கையில் கருத்து வேறுபாடுகளை அடக்குதல் ஆண்டு அறிக்கை *2023*



*மார்ச் 7 அன்று IUSF ஏற்பாடு செய்திருந்த போராட்டத்தைக் கலைப்பதற்கு, இரும்பு வளையங்களுடனான மரக் கம்புகளை ஏந்தியவாறு முகமூடி அணிந்த இராணுவ வீரர்கள் நிறுத்தப்பட்டனர். போராட்டத்தைக் கட்டுப்படுத்துவதில் இராணுவம் தங்கள் சம்பந்தத்தை மறுத்ததால், இந்த வீரர்களின் அல்லது அவர்களது படை யின் விவரங்கள் தொடர்ந்தும் தெரியவரவில்லை.*
*புகைப்பட உபயம்: ஷெஹான் குணசேகர*

**INFORM** Human Rights Documentation Centre
www.inform.lk

https://www.inform.lk/
*2023இல் இலங்கையில் கருத்து வேறுபாடுகளை அடக்குதல்: ஆண்டு அறிக்கை.*
*மே 2024இல் வெளியிடப்பட்டது.*
*© INFORM மனித உரிமைகள் ஆவண நிலையம்*
*கொழும்பு, இலங்கை*
*https://www.inform.lk/*

***அறிக்கை பற்றி***

*எதிர்ப்பின் அடக்குமுறை என்பது இலங்கையில் உள்ள INFORM மனித உரிமைகள் ஆவண நிலையத்தால் வெளியிடப்பட்ட காலமுறை மனித உரிமைகள் மேம்படுத்தல் தொடர் ஆகும். இந்த அறிக்கைகள் இலங்கையில் கருத்து வேறுபாடுகளை அடக்குவது தொடர்பான குறிப்பிடத்தக்க சம்பவங்களின் சில பொதுவான போக்குகளையும் மற்றும் விவரங்களையும், முக்கியமாக பிரதான மற்றும் சமூக ஊடகங்களில் தெரிவிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் வழங்குகின்றன. கைதுகள், அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள், மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கு [human rights defenders (HRDs)] எதிரான விசாரணைகள் மற்றும் புதிய அடக்குமுறைச் சட்டங்கள் மற்றும் கொள்கை முடிவுகள் போன்ற சாத்தியமான அச்சுறுத்தல்கள், கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடல், கருத்திணக்கம் மற்றும் கருத்து வேறுபாடு போன்றவற்றைப் பாதிக்கும் சம்பவங்கள் பற்றிய தகவல்கள் இதில் அடங்கும்.*

*இலங்கையின் மனித உரிமைகள் நிலைமையைக் கண்காணிக்கவும் அத்துடன் ஆவணப்படுத்தவும், குறிப்பாக இன மோதல் மற்றும் போரின் பின்னணியில், உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் எழுத்து மற்றும் வாய்வழி தலையீடுகள் மூலம் நிலைமையை அறிக்கையிடவும் 1990இல் INFORM நிறுவப்பட்டது. உரிமைகள் அடிக்கடியும் மற்றும் முறைமைரீதியாகவும் மீறப்படும் ஏனைய சமூகங்களுடன் இணைந்து பணியாற்றுவதில் INFORM கவனம் செலுத்தியது. தற்போது, தேர்தல் கண்காணிப்பு, கருத்துச் சுதந்திரம் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்கள் ஆகியன மீது INFORM கவனம் செலுத்துகிறது. இலங்கையின் கொழும்பில் INFORM தளத்தைக்கொண்டுள்ளதுடன், உள்ளூர் செயலார்வலர்களுடனும், குழுக்களுடனும் மற்றும் வலைப்பின்னலமைப்புக்களுடனும் மற்றும் பிராந்திய (ஆசிய) மற்றும் சர்வதேச மனித உரிமைகள் வலைப்பின்னலமைப்புக்களுடனும் நெருக்கமாகச் செயல்படுகிறது.*

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| *1.* | நிறைவேற்றுச் சாராம்சம் | *3* |
| *2.* | கண்ணோட்டம் | *9* |
| *3.* | விடயப் புதுப்பிப்புகள் | *13* |
| *4.* | ஊடகங்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் மீதான அடக்குமுறை | *22* |
| *5.* | ஒன்றுகூடும் சுதந்திரத்தின் அடக்குமுறை | *25* |
| *6.* | கருத்துச் சுதந்திரத்தின் அடக்குமுறை | *30* |
| *7.* | செயலார்வலர்களினதும் மற்றும் தகவலளிப்பவர்களினதும் மீதான அடக்குமுறை | *31* |
| *8.* | அடக்குமுறை சட்ட மற்றும் கொள்கை நடவடிக்கைகள் | *32* |
| *9.* | அரச அலுவலர்களின் அடக்குமுறை | *35* |
| *10.* | உள்ளூராட்சி மன்றத் தேர்தல் | *36* |
| *11.* | வேறு | *37* |

# *1. நிறைவேற்றுச் சாராம்சம்*

*இந்த வருடாந்த அறிக்கையானது 2023ஆம் ஆண்டில் மாதாந்தம் வெளியிடப்பட்ட கருத்து வேறுபாடு அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த வருடாந்தக் கருத்து வேறுபாடு அறிக்கையானது முக்கியமாக பிரதான நீரோட்ட மற்றும் சமூக ஊடகங்கள் மீதான அடிப்படையில் இலங்கையில் கருத்து வேறுபாடுகளை அடக்குவது தொடர்பான குறிப்பிடத்தக்க சம்பவங்களின் சில பொதுவான போக்குகளையும் மற்றும் விவரங்களையும் வழங்குகிறது. அத்துடன் இது இலங்கையின் மனித உரிமை காட்சிப்பரப்பு பற்றிய ஒரு பரந்த கண்ணோட்டத்தையும் வழங்குகிறது.*

***முறைமையியல்:*** *கைதுகள், அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள், மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கு [human rights defenders (HRDs)] எதிரான விசாரணைகள் ஆகியனவற்றையும் மற்றும் எதிர்காலத்தில் கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடல், கருத்திணக்கம் மற்றும் கருத்து வேறுபாடு ஆகியவற்றின் சுதந்திரத்திற்கு காயம் விளைவிக்கக்கூடிய புதிய அடக்குமுறைச் சட்டங்கள், நியமனங்கள் மற்றும் கொள்கை முடிவுகள் போன்ற உத்தேசமான அச்சுறுத்தல்களையும் இந்த வருடாந்த அடக்குமுறை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அடக்குமுறைச் சம்பவங்கள் உள்ளடக்குகின்றன. எதிர்ப்பு, தடுப்பாற்றல் மற்றும் விசாரணைக்கு எதிரான சவால் ஆகியவற்றின் செயற்பாடுகளை அல்லது பொலிஸ், ஆயுதப் படைகள், மதக் குழுக்கள் மற்றும் அரசியல்வாதிகள் உட்பட அரசு அல்லது அரசு சாரா எந்திரத்தின் கைகளில் உரிமை மீறல்களையும், சமூக அநீதிகளையும் பதிவுசெய்யும் முயற்சியை இந்த அறிக்கையில் "கருத்து வேறுபாடு" என்பது உள்ளடக்கியதாக பரவலாக வரையறுக்கப்பட்டுள்ளது. "அடக்குமுறை" என்பது கருத்து வேறுபாடுகளின் செயல்களை அடக்குவதற்கு மேற்கூறிய அரசு அல்லது அரசு சாராதவர்கள் மேற்கொள்ளும் எந்த முயற்சியும் ஆகும். மனித உரிமைகளை மறுக்கும் எந்தவொரு சொல்லாட்சியும், உரிமைகளை அழிக்கும் சாத்தியம் இருப்பதால், எதிர்ப்பின் அடக்குமுறையாகவும் கருதப்படுகிறது.*

***விடயப் புதுப்பிப்புகள்:*** *5 மாதங்களுக்கும் மேலாக பயங்கரவாதக் குற்றச்சாட்டின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த மாணவர் செயலார்வலரான வசந்த முதலிகேவிற்கு பெப்ரவரி மாத ஆரம்பத்தில் பிணை வழங்கப்பட்டது. மூன்று வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற போராட்டமொன்று தொடர்பாக மேலும் 21 மாணவ செயலார்வலர்கள் மீது விதிக்கப்பட்ட பிணை நிபந்தனைகளும் பெப்ரவரியில் நீக்கப்பட்டன. ஓகஸ்டில், மேலும் இரு மாணவர் செயலார்வலர்களுக்கு 200 நாட்கள் கொண்ட காவலுக்குப் பின்னர் பிணை வழங்கப்பட்டது. இரு தசாப்தங்களுக்கு முன்னர் காலாவதியான கண்ணீர்ப்புகைக் குண்டுகளை இலங்கைப் பொலிஸ் பயன்படுத்தியுள்ளதாக புலனாய்வு ஊடக அறிக்கை ஒன்று மார்ச் மாதத்தில் கண்டறிந்துள்ளது. காலாவதியான கண்ணீர்ப்புகைக் குண்டு பிரயோகத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் ஆர்ப்பாட்டக்காரர் ஒருவரின் மரணம் தொடர்பில், கண்ணீர்ப்புகைக் குண்டுகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார். காலாவதியான அனைத்து கண்ணீர்ப்புகைக் குண்டு கையிருப்புகளையும் அகற்றுமாறு பொலிஸூக்கு இலங்கை நாடாளுமன்றத்தின் பொதுக் கணக்குக் குழு [Committee on Public Accounts (COPA)] ஏப்ரலில் அறிவுறுத்தியது. மே மாதத்தில், முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் மற்றும் ஏனையோருக்கும் விதிக்கப்பட்ட பயணத் தடையைக் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் இரத்துச் செய்தது. ஜூலையில், மிரிஹானாவில் அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களை உடல்ரீதியாக தாக்கியதிற்கும் மற்றும் தன்னிச்சையாக கைது செய்ததிற்கும் எதிராகவும், மே 2022இல் காலிமுகத் திடலில் கும்பல் தாக்குதல்களைத் தடுக்காததிற்காகவும் தாக்கல் செய்யப்பட்ட இரு அடிப்படை உரிமை மனுக்களை மீஉயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அரசு வழக்கறிஞர்கள் முன்வைத்த ஆரம்ப ஆட்சேபனைகளைக் கருத்தில் கொண்டு, மனுக்களைத் தொடர அனுமதி வழங்கப்படவில்லை. டிசம்பரில், அரகலய இயக்கத்துடன் தொடர்புடைய சட்டத்தரணிகள் குழுவிற்கு இடையூறு விளைவித்ததற்காக பொலிஸ் மற்றும் இராணுவம் ஆகியன வருத்தம் தெரிவித்தன.*

*2022 மே மாதம் காலிமுகத் திடலில் போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து, வன்முறையைத் தடுக்கத் தவறியதாகக் கூறப்படும் பொலிஸ் மற்றும் இராணுவத் தலைவர்களுக்கு எதிராக அமைச்சர்கள் மற்றும் அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகி*யோ*ர் உட்பட பல தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை மனு, ஒரு புதிய விசாரணையை நடத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்களால் வழங்கப்பட்ட உறுதிமொழியைத் தொடர்ந்து மனுதாரர்களால் மீளப்பெறப்பட்டது. 2020இல், கொழும்பில் நடைபெற்ற அமைதியான போராட்டத்தின் போது, எதிர்ப்பாளர்களைத் தன்னிச்சையாக கைது செய்த வழக்கு தொடர்பாக, சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கும் மற்றும் ஏனைய பொலிஸ் அலுவலர்களுக்கும் எதிரான அடிப்படை உரிமை மனுவைத் தொடர்வதற்கு, ஜூன் மாதத்தில் மீஉயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியது. ஏப்ரல் 2022இல், ரம்புக்கனவில்*

போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியது குறித்து HRCSL வெளியிட்ட அறிக்கையில், போராட்டக்காரர் ஒருவரின் மரணத்திற்கும் மற்றும் மேலும் பதினெட்டு பேர் காயமடைந்தமைக்கும் பொலிஸ் அதிக பலத்தை பயன்படுத்தியதாகக் கண்டறியப்பட்டது. மஹர சிறைச்சாலையில் 11 கைதிகள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பிலான நீதவான் விசாரணைகளை வெலிசர நீதவான் நீதிமன்றம் நிறைவு செய்ததுடன், துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட சிறைச்சாலை அலுவலர்களைக் கைது செய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

**சட்ட மாற்றங்கள்:** சாத்தியமான சித்திரவதைக்கும் மற்றும் மோசமாக நடத்தப்படுவதற்கும் எதிராக விமர்சிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய புனர்வாழ்வு பணியகச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. இரு முன்மொழியப்பட்ட அடக்குமுறைச் சட்டங்கள், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் [Anti-Terrorism Act (ATA)] மற்றும் நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் (Online Safety Bill) ஆகியவை செப்ரெம்பர் நடுப்பகுதியில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டன. நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலத்தை எதிர்த்து மீஉயர் நீதிமன்றத்தில் மொத்தம் 46 சிறப்பு நிர்ணய மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அதன் ஏற்பாடுகளின் 31 விதிகளில் திருத்தங்களுக்கு உட்பட்டு, நாடாளுமன்றத்தில் எளிய பெரும்பான்மையொன்றுடன் சட்டமூலம் நிறைவேற்றப்படலாம் என்று மீஉயர் நீதிமன்றம் தீர்மானித்தது. பல்வேறு செயலார்வலர்களின் கடும் எதிர்ப்பு காரணமாக நாடாளுமன்றத்தில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் முன்வைக்கப்படவில்லை. முன்மொழியப்பட்ட ஒளிபரப்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுச் சட்டத்தின் [Broadcasting Regulatory Commission Act (BRCA)] ஆரம்ப வரைவானது ஓர் அரசியல்ரீதியாக நியமிக்கப்பட்ட அமைப்பு மூலம் ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியாக ஊடகவியலாளர்களாலும் மற்றும் ஊடக உரிமைக்காக வாதாடுபவர்களாலும் பரவலாக விமர்சிக்கப்பட்டது. ஊடகங்களுக்கு சுகாதார ஊழியர்கள் அறிக்கை வெளியிடுவதைத் தடைசெய்யும் அண்மைய சுற்றறிக்கை தொடர்பில் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடல் ஒன்றை சுகாதார அமைச்சு நடத்தியது. உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புச் செயல்பாட்டில் மேலதிக நிதியைப் பயன்படுத்த முற்படும் சர்ச்சைக்குரிய உள்நாட்டு வருமானச் சட்டமூலம் (Inland Revenue Bill) இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் [Prevention of Terrorism Act (PTA)] கீழ் இரு ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்ட சில விதிமுறைகள் அடிப்படை உரிமைகளை மீறுவதாக மீஉயர் நீதிமன்றம் அறிவித்தது. ஊழலுக்கு எதிரான சட்டம் 196 முன்மொழியப்பட்ட திருத்தங்களுடன் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**தேர்தல்:** உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு எதிராக ஒரு முன்னாள் இராணுவ அலுவலர் தாக்கல் செய்த எழுத்தாணை மனுவொன்றின் விசாரணையின் போது, நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிநிலை காரணமாக தேர்தலுக்கான நிதியை விடுவிக்க முடியவில்லை என நீதிமன்றத்தில் நிதியமைச்சு தெரிவித்துள்ளது. அமைச்சுக்கு நிதி வழங்குவதை தடை செய்து மீஉயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்திருந்தும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான புதிய திகதியாக ஏப்ரல் 25ஆம் திகதியை தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்தும் தேர்தல் நடத்தப்படவில்லை. தேர்தலை நடத்தாமல் உள்ளூராட்சி மன்றங்களை மீண்டும் கூட்டுவதற்கு முன்மொழியப்பட்ட தனியார் உறுப்பினர் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது என நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

**பொறுப்புக்கூறல்:** 2019இல், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களைத் தடுக்க முன்னாள் ஜனாதிபதியும் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய உயர் அலுவலர்களும் தவறிவிட்டனர் என்பதுடன், எனவே முன்கூட்டியே தகவல் இருந்தபோதிலும், பாதிக்கப்பட்டவர்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என்று மீஉயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அது 310 மில்லியன் இலங்கை ரூபாவை அவர்களுக்கு நட்டஈடாக வழங்குமாறு கோரியுள்ளது. 2018இல், உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னாள் ஜனாதிபதி சிறிசேனவும் மற்றும் ஏனையவர்களும் மொத்த இழப்பீட்டில் 9%க்கும் குறைவானதை ஆறு மாத காலக்கெடு முடிவதற்குள், ஜூலையில் கொடுப்பனவு செய்துள்ளனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் இலங்கை அரசியல்வாதிகளுக்கும் மற்றும் இராணுவத்தினருக்கும் தொடர்பு இருப்பதாக இங்கிலாந்தை தளமாகக் கொண்ட தொலைக்காட்சி அலைவரிசையான செனல் 4இனால் சார்த்துரைக்கப்பட்ட வலியுறுத்தல்கள் பாதுகாப்பு அமைச்சால் மறுக்கப்பட்டு, கண்டிக்கப்பட்டன. மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில், முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாயக்கவுக்கு எதிரான குற்றச்சாட்டை மேன்முறையீட்டு நீதிமன்றம் இரத்து செய்துள்ளது.

தமக்கு எதிரான பணத் தூய்மைப்படுத்தல் வழக்கில் இருந்து தம்மை விடுவிக்குமாறு நீதிமன்றத்திடம் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் மற்றும் நான்கு சந்தேகநபர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். சர்ச்சைக்குரிய MiG ஒப்பந்த வழக்கில், முக்கிய சந்தேக நபர் ஒருவருக்கு விதிக்கப்பட்டிருந்த பயணத்தடையைக் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் தற்காலிகமாக நீக்கியுள்ளது. 2009இல், ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டதற்கு மிக

நெருக்கமான காரணம் MiG ஒப்பந்தத்தை அம்பலப்படுத்தியதாக நம்பப்பட்டது. தவறான நிர்வாகத்தின் காரணமாக, நாட்டின் பொருளாதாரத்தை நெருக்கடிநிலைக்கு இட்டுச் சென்றதன் மூலம், பல முன்னணி அரசியல்வாதிகளினாலும் மற்றும் முன்னாள் அரசாங்கத்தின் பல உயர்மட்ட அரசு அலுவலர்களாலும் பொதுமக்களின் நம்பிக்கையும் மற்றும் சட்டத்தின் முன் சமத்துவமும் மீறப்பட்டுள்ளதாக, மற்றொரு முக்கிய தீர்ப்பை மீஉயர் நீதிமன்றம் வழங்கியது. மனித உரிமை மீறல்களின் பெருமளவு சார்த்துரைகளுக்கு உள்ளான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், இலங்கைப் பொலிஸின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். 2010இல், காவலில் வைக்கப்பட்டிருந்த போது இடம்பெற்ற மரணம் தொடர்பாக சந்தேக நபரை சித்திரவதை செய்தமை, தன்னிச்சையாகக் கைது செய்தமை மற்றும் தடுத்து வைத்தமை ஆகியவற்றுக்கு அவரும் அத்துடன் பெருமளவு பொலிஸ் அலுவலர்களும் குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்டுள்ளனர்.

**ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள்:** ஊடகங்களும் மற்றும் ஊடகவியலாளர்களும் முக்கியமாக சட்ட வினைப்படுத்தல் அலுவலர்களினால் துன்புறுத்தலுக்கு உள்ளான பல விடயங்கள் உள்ளன. அடிக்கடி அடக்குமுறையிலான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, குறைந்தபட்சம் 2 ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டனர் மற்றும் ஒரு தெளிவான காரணமின்றி 10 ஊடகவியலாளர்கள் வரவழைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டனர். ஊடகவியலாளரும் மற்றும் ஊடக உரிமைச் செயலார்வலளருமான தரிந்து உடுவரகெதர மீதான தாக்குதல் மற்றும் தன்னிச்சையாக கைது செய்யப்பட்டமை ஆகியவற்றை உள்ளூர் மற்றும் சர்வதேச குழுக்கள் பரவலாகக் கண்டித்தன. ஒரு சம்பவத்தில், அவரது ஆதாரங்களை வெளியிடுமாறு பொலிஸார் பலமுறை ஒரு ஊடகவியலாளரைக் கோரினர். ஊடகவியலாளர்கள் சில பகுதிகளுக்குள் அல்லது வளாகங்களுக்குள் பிரவேசிக்க அனுமதிக்காத மற்றும் தடுக்கப்பட்ட சம்பவங்களும் நடந்தன. சில நேரங்களில், ஊடகவியலாளர்களிடம் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஊடக அடையாள அட்டைகளை வழங்குமாறு பொலிஸ் கேட்டதுடன், அவை பல இணைய அடிப்படையிலான ஊடகவியலாளர்களிடம் இருக்கவில்லை.

ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கு எதிராகப் பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியதுடன், அரசாங்கத்திற்கு எதிரான சதியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் வேறு தொலைக்காட்சி அலைவரிசை தொடர்பாக பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது. ஒரு பௌத்த துறவியின் தலைமையிலான கும்பலால் மூன்று ஊடகவியலாளர்கள் தடுத்து வைக்கப்பட்டு, அவர்கள் காட்சியாக எடுத்தவற்றை நீக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ஒரு தசாப்தத்திற்கு முன்னர் கொல்லப்பட்ட பல ஊடகவியலாளர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கு நீதி கோரி நினைவேந்தல் நிகழ்வுகள் நடத்தப்பட்டன. காணாமற்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட குறித்து, எட்டு தொலைபேசி இலக்கங்கள் தொடர்பிலான மேலதிக சாட்சியங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அரசுக்குச் சொந்தமான தொலைக்காட்சி கூட்டுத்தாபனத்தின் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தியதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிரான வழக்கு 15 வருடங்களைக் கொண்ட மௌனத்தின் பின்னர் விசாரணையை நீதிமன்றம் ஆரம்பித்துள்ளது. பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்காததன் அடிப்படையில், ஊடகவியலாளர் ஒருவரின் இணையத்தளத்தை பதிவு செய்யாமல், அவரது உரிமைகளை அரசாங்கச் செய்தித் திணைக்களம் மீறியுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு [Human Rights Commission of Sri Lanka (HRCSL)] முடிவு செய்துள்ளது.

2019 ஏப்ரலில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் சண்முகன் தவசீலன் என்பவரை அச்சுறுத்தியதற்காக கடற்படைப் புலனாய்வு அலுவலர் ஒருவருக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது. தகவல் அறியும் உரிமை [Right to Information (RTI)] ஆணைக்குழு ஆணை பிறப்பித்த போதிலும், கடந்த ஆண்டு ஊடகவியலாளரும் மற்றும் ஊடக உரிமை செயலார்வலருமான தரிந்து ஜயவர்தன மீது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பான பொலிஸ் விசாரணைகளின் முன்னேற்றம் குறித்த தகவல்களை வழங்க பொலிஸார் தவறிவிட்டனர். ஊடகவியலாளர் ஒருவரை தாக்கியதாக கூறப்படும் பிங்கிரிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு எதிராக விசாரணை நடத்துமாறு கோரி பொலிஸிடம் கடிதம் ஒன்றை உள்ளூர் ஊடக உரிமைகள் குழுவொன்று கையளித்துள்ளது.

**ஒன்றுகூடும் சுதந்திரம்:** பல்வேறு அமைதியான ஒன்றுகூடல்களையும் மற்றும் நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்த பலர் அச்சுறுத்தல்கள், மிரட்டல், கைது, தடுப்புக்காவல் மற்றும் சட்ட நடவடிக்கை ஆகியன உள்ளிட்ட பழிவாங்கல்களைத் தொடர்ந்தும் எதிர்கொண்டனர். தொழிற்சங்கங்கள், மாணவர் செயலார்வலர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் ஏனையோர் நடத்திய பல்வேறு போராட்டங்களுக்கும் மற்றும் ஆர்ப்பாட்டங்களுக்கும் எதிராக குறைந்தபட்சம் 16 தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. தமிழர்

*மாவீரர் தினத்தை முன்னிட்டு கட்டப்பட்டிருந்த நினைவுச் சின்னம் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் பொலிஸாரால் இடித்து தரைமட்டமாக்கப்பட்டது. இடையிடையே, வடக்கிலும் மற்றும் கிழக்கிலும் சிவில் சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு எதிராகப் பொலிஸாரால் கோரப்பட்ட தடை உத்தரவுகளை நீதிமன்றம் நிராகரித்தது. போராட்டக்காரர்களைக் கண்ணீர் புகைக்குண்டினாலும் மற்றும் தண்ணீரினாலும் தாக்கி, குறைந்தது 21 போராட்டங்களைப் பொலிஸார் கலைத்தனர், இந்த 21இல், 17 மாணவ செயலார்வலர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், மற்றவை சிவில் சமூக செயலார்வலர்களினாலும், தொழிற்சங்கங்களினாலும் மற்றும் அரசியல் கட்சிகளாலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அண்ணளவாக 10 போராட்டங்கள் அல்லது நிகழ்வுகள் பொலிஸினால் தடுக்கப்பட்ட அதேவேளை, சில சிங்களப் பௌத்த தேசியவாதக் குழுக்களும் தடுக்கப்பட்டன.*

*கால்நடை வளர்ப்போர் நடத்திய போராட்டத்தைப் பொலிஸார் உடல்ரீதியாக தாக்கி கலைத்தனர். அரசியல் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போராட்டத்தின் போது, பொலிஸார் அதைக் கலைக்க முயன்ற போது, 28 பேர் காயமடைந்ததுடன், ஒருவர் உயிரிழந்துள்ளார். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றிய பிரியந்த வன்னிநாயக்க என்ற பாதுகாப்பு உத்தியோகத்தர் கண்ணீர் புகைக்குண்டு தாக்குதலுக்கு இலக்காகி, உயிரிழந்துள்ளார்.*

*ஆண்டு முழுவதும் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களினதும் மற்றும் போராட்டங்களினதும் போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர், அவர்கள் மீது கண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டன. வடக்கு மாகாணத்தில் ஆண்டு முழுவதும் நடைபெற்ற பல்வேறு போராட்டங்களின் போது 100க்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த குறைந்தது 30 பேர், செயலார்வலர்கள் மற்றும் 8 ஏனையோர் அடங்குவர். அமைதியான நிகழ்ச்சிகளில் பங்கேற்றது தொடர்பாக அண்ணளவாக 10 செயலார்வலர்களைப் பொலிஸார் வரவழைத்து விசாரித்தனர்.*

***செயலார்வலர்களினதும் மற்றும் தகவலளிப்பவர்களினதும் அடக்குமுறை:*** *பல மனித உரிமைகள் பாதுகாவலர்கள் தங்கள் ஊக்கத்துடன் இயங்குதலின் காரணமாக தன்னிச்சையான கைது, தடுப்பு மற்றும் வேறு பழிவாங்கல்கள் ஆகியவற்றுக்கு உட்படுத்தப்பட்டனர். தமிழ் இனப்படுகொலைத் தினத்தை நினைவுகூர்ந்ததிற்காக மட்டக்களப்பில் சிவில் சமூக அமைப்பொன்றின் ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்ட அதேவேளை, மக்கள் எதிர்ப்பு இயக்கம் 2022உடன் தொடர்புடைய ஒரு செயலார்வலர் மற்றும் இரு விவசாயிகளின் தலைவர்கள் ஆகியோர் உடல்ரீதியாகத் தாக்கப்பட்டனர். மனித உரிமைகள் வழக்கறிஞர் ஒருவருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது. மட்டக்களப்பு நகரைச் சுற்றி ஒரு காணாமற்போன எதிர்ப்புச் செயலார்வலர் மீது அவதூறு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.*

***அடக்குமுறையிலான சட்ட மற்றும் கொள்கை நடவடிக்கைகள்:*** *கருத்துச் சுதந்திரம் மற்றும் பிறவற்றில் கடுமையான தாக்கங்களைக் கொண்டுள்ள மூன்று வரைவுச் சட்டங்கள் - பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (ATA), நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் [Online Safety Bill (OSB)] மற்றும் நீதிமன்ற, தீர்ப்பாய அல்லது நிறுவன அவமதித்தல் சட்டம் - ஆகியன செப்ரெம்பர் மற்றும் ஜூன் ஆகிய மாதங்களில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டன. தண்டனைக்குரிய குற்றங்கள் மற்றும் சரியான காசோலைகள் மற்றும் நிலுவைகள் இல்லாமல் நிறைவேற்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரு நிறுவனம் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட தேவையற்ற மற்றும் சமமற்ற தண்டனைத் தடைகள் என குறிப்பிடப்பட்ட தெளிவற்ற மற்றும் மிகையான வார்த்தைகளை OSB கொண்டிருந்தது. ATAஇல் தெளிவற்ற, பரந்த சொற்கள், குற்றச்சாட்டுகள் இன்றி நீண்ட காலத்திற்கு காவலில் வைக்க அங்கீகாரம் அளித்தல், நீடிக்கப்பட்ட தடுப்புக் காலம், நிறைவேற்றுத் தலைவருக்கு அளிக்கப்பட்ட அதிகப்படியான அதிகாரங்கள் மற்றும் பொலிஸ் அதிகாரங்களை விரிவாக்குதல் ஆகியவை அடங்கும். கருத்துச் சுதந்திரத்தின் மீது கடுமையான எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் ஒலிபரப்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுச் சட்டத்தையும் [Broadcasting Regulatory Commission Act (BRCA)] அரசாங்கம் முன்மொழிந்தது. நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட அதே வேளை, சிவில் சமூகத்தின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் ஏனைய இரு சட்டங்களும் முன்னேற்றம் அடையவில்லை. இந்தச் சூழலில், இராணுவத்திற்கு சிறப்பு அதிகாரங்களை வழங்கும் மாதாந்த வர்த்தமானிகள் ஆண்டு முழுவதும் வெளியிடப்பட்டதுடன், இவை இராணுவமயமாக்கலின் தொடர்ச்சியான போக்குகளைச் சுட்டிக்காட்டுகின்றன. அத்துடன் தொழிற்சங்க நடவடிக்கைகளை ஊக்கங்கெடுப்பதற்கும் மற்றும் தடுப்பதற்கும் சில சேவைகளை அத்தியாவசியச் சேவைகளாகவும் பிரகடனப்படுத்துகின்றன. 2022இல், ஆக்கிரமிக்கப்பட்ட மக்கள் போராட்டங்கள் நடைபெற்ற காலிமுகப் பசுமைப் பொதுப் பூங்காவில், சமூகப் பொறுப்புணர்வுத் திட்டமாக இந்த மைதானத்தை துறைமுக அதிகாரசபை மேற்கொண்டுள்ளதாக வலியுறுத்தி, அங்கு எந்தப் போராட்டமும் நடைபெறுவதை அரசாங்கம் கட்டுப்படுத்தியது. பெப்ரவரியில், மருத்துவமனைகளிலும்*

மற்றும் சுகாதார நிறுவனங்களிலும் கறுப்புக் கொடிகளைக் காட்டுவதைத் தடைசெய்து, சுகாதார அமைச்சு ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டதுடன், இது போன்ற நடவடிக்கைகள் நோயாளிகளின் மன ஆரோக்கியத்தை எதிர்மறையாக பாதிக்கும் என்று அது வலியுறுத்தியது. திணைக்களத் தலைவரின் அனுமதியின்றி ஊடகங்களுக்கு கருத்துக்களை வெளியிடுவதற்குத் தடை விதித்து சுகாதார அமைச்சினால் மற்றுமொரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. குழந்தை ஊட்டச்சத்து குறைபாடு பற்றிய ஆபத்தான விகிதங்களை வெளிப்படுத்தியதற்காக மருத்துவரின் இடைநிறுத்தத்தை உறுதி செய்த மீஉயர் நீதிமன்றத்தின் கடந்த ஆண்டு தீர்ப்பையும் அது குறிப்பிடுகிறது. 2022 ஏப்ரலில், ரம்புக்கனையில் மக்கள் போராட்டத்தின் போது துப்பாக்கிச் சூடு நடத்திய பொலிஸ் அலுவலர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்ததற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவைக் கண்டித்து, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருக்கு தேசியப் பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழு கடிதம் ஒன்றைச் சமர்ப்பித்தது. உள்ளூர் சிவில் சமூக அமைப்புகளால் நடத்தப்படும் சமாதான மற்றும் நல்லிணக்கத் திட்டங்களை மேற்பார்வையிடவும் அத்துடன் வசதிப்படுத்தவும் ONURக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பற்றிய கரிசனைகளை வெளிப்படுத்தி, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கச் சட்டத்திற்கான (National Unity and Reconciliation Act) புதிய அலுவலகம் தொடர்பாக தேசிய சமாதானப் பேரவை (National Peace Council) அறிக்கை ஒன்றை வெளியிட்டது,

**அரச அலுவலர்கள் மீதான அடக்குமுறை:** உயர் மட்ட அரசியல்வாதிகளையும் மற்றும் அரச அலுவலர்களையும் விசாரணைக்கு அழைத்த விவகாரத்தில், ஏனைய உறுப்பினர்களின் கருத்துக்கு எதிராக தனது விருப்பப்படி HRCSLஇன் தலைவர் செயல்படுவதாகக் குற்றஞ்சாட்டி, ஜனாதிபதிக்கு HRCSLஇன் மூன்று ஆணையாளர்கள் கடிதம் எழுதியுள்ளனர். உயர்தரப் பரீட்சையின் போது, தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கான உத்தரவை இலங்கை மின்சார சபை அலுவலர்களிடம் இருந்து சம்மதத்தை வலுக்கட்டாயமாக ஏற்றுக்கொண்ட HRCSL உறுப்பினர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க ஆலோசனை கோரியதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் விஜேசேகர தெரிவித்துள்ளார். இடதுசாரி அரசியல் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்தில் சிவில் உடையில் (கடமைக்கு வெளியே) கலந்துகொண்ட பொலிஸ் அலுவலர் ஒருவர் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார். இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் [Public Utilities Commission of Sri Lanka (PUCSL)] தலைவர் ஜானக ரத்நாயக்கவை பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. பின்னர், அவருக்கு கொலை மிரட்டல் விடுத்து பல அழைப்புகள் வந்தன. அவர் பதவியில் இருந்து நீக்கப்படுவதற்கு முன்னர், அரசாங்கத்திற்கு எதிராக சதி செய்ததாகக் கூறி அவரது அலுவலக வளாகத்திலும் பொலிஸார் சோதனை நடத்தினர்.

புதிய விகாரை ஒன்றை நிருமாணிப்பதற்கு அனுமதி வழங்குமாறு கோரி, பௌத்த பிக்குகள் குழுவொன்று மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் அரச அலுவலர்களை அச்சுறுத்தியது. சர்ச்சைக்குரிய குருந்தூர் மலை தொல்பொருளியல் தளத்தில் இந்துக்கள் மதச் சடங்குகளை நடத்த அனுமதித்ததற்காக நீதவானை இடமாற்றம் செய்ய வேண்டும் என்று தேசியவாத நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கோரிக்கை விடுத்தார். குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் [Criminal Investigation Department (CID)] முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவை வாகன விபத்தில் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்களுக்கும் மற்றும் மனித வள மேம்பாட்டுத் துறையினருக்கும் எதிரான குற்றங்கள் உட்பட பெருமளவு அடையாள வழக்குகள் தொடர்பான பல விசாரணைகளுக்கு அபேசேகர தலைமை தாங்கினார். ஜனாதிபதி மாளிகையில் கண்டெடுக்கப்பட்ட பணத்தை அமைச்சர் ஒருவரிடம் ஒப்படைக்குமாறு SDIG தேசபந்து தென்னகோனின் அறிவுறுத்தலுக்கு இணங்காமல் நேரடியாக நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்கு பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.எஸ்.விக்ரமசிங்க எடுத்த தீர்மானத்தினால், SDIG தென்னகோனிடமிருந்து அவர் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டார். NPPஉடன் அரசியலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஓய்வுபெற்ற மூன்று இராணுவ அலுவலர்கள் இலங்கை விமானப்படையால் (SLAF) கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டதாக தேசிய மக்கள் கட்சி [National People's Party (NPP)] தெரிவித்துள்ளது.

**உள்ளூராட்சி மன்றத் தேர்தல்:** தேவையான நிதியை அரசு வழங்க மறுத்ததால், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிப்பு இல்லாமல் ஒத்திவைக்கப்பட்டது. தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மூவருக்கு அவர்களது பதவிகளில் இருந்து விலகக் கோரி கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. அமைச்சரவைத் தீர்மானமொன்றின் அடிப்படையில், தேர்தல் வேட்பாளர்களிடம் இருந்து கட்டுப்பணம் பெறுவதைத் தவிர்க்குமாறு மாவட்டச் செயலாளர்களுக்கு மாகாண சபைகளுக்கும் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் பொறுப்பான அமைச்சின் செயலாளர் கடிதம் ஒன்றை விடுத்துள்ளார். இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிநிலைக்கு மத்தியில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலைத் தடுக்கக் கோரி, முன்னாள் இராணுவ அலுவலரினால் எழுத்தாணை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. ஜனாதிபதி விக்கிரமசிங்க, நிதியமைச்சர் என்ற வகையில், நிதி நெருக்கடிநிலையை மேற்கோள் காட்டி,

*தேர்தல் தொடர்பான செலவுகளை தவிர்த்து, அத்தியாவசிய சேவைகளின் பட்டியலொன்றில் செலவினங்களைக் கட்டுப்படுத்துமாறு அரசுக்கு அறிவுறுத்தும் சுற்றறிக்கைகளை வெளியிட்டார். அதனையடுத்து, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தேவையான நிதியை விடுவிப்பதில் உள்ள சிரமங்கள் குறித்து தேசிய தேர்தல் ஆணைக்குழுவிடம் (NEC) நிதி மற்றும் திறைசேரி அமைச்சின் செயலாளர் அறிவித்தார்.*

***ஏனைய சம்பவங்கள்:*** *நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள சில தொழிற்சங்கங்கள் மற்றும் மாணவர் சங்கங்கள் ஆகியன பயங்கரவாதிகள் என அழைக்கப்படலாம் என இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்துள்ளார். ஆணைக்குழுவின் நிலைப்பாட்டை மாற்றுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்க ஆணைக்குழுவுக்குச் சென்ற இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு உறுப்பினர்களை அச்சுறுத்திய குற்றச்சாட்டின் பேரில் இரு தொழிற்சங்கவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். கண்டியில் உள்ள பல்லக்கு ஆலயம் குறித்து அவதூறான கருத்துகளை வெளியிட்டதாக 'யூடியூபர்' சேபால் அமரசிங்க கைது செய்யப்பட்டுள்ளார். அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தின் போது, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் [Sri Lanka Broadcasting Corporation (SLRC)] பலவந்தமாகப் பிரவேசித்ததிற்காக செயலார்வலர் ரண்டிமல் கமகே கைது செய்யப்பட்டார். அரச புலனாய்வுச் சேவைகளின் [State Intelligence Services (SIS)] தலைமையகத்தில் தகவல் அறியும் உரிமைக் கோரிக்கையை செயலார்வலரான சிரந்தன அமரசிங்க கையளிக்கும் போது கைது செய்யப்பட்டு, பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது, சித்திரவதை செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. போராட்டங்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் காலாவதியான கண்ணீர்ப்புகைக் குண்டுகளைப் பயன்படுத்தியதால், அதில் வெளிப்பட்டவர்களுக்கு கடுமையான உடல் நலக்குறைவு ஏற்பட்டதுடன், அதைப் பொலிஸார் மறுத்துள்ளனர். வேலை முடிந்து திரும்பிக் கொண்டிருந்த வழக்கறிஞர் ஒருவரை இருவர் தாக்கியுள்ளனர். தனது கவிதை மூலம் தீவிரவாதத்தை ஊக்குவித்ததாகக் கூறி அநியாயமாக கைது செய்யப்பட்டு ஓராண்டுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த கவிஞர் அஹ்னாப் ஜஸீம், பாதுகாப்பு அமைச்சினால் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய நபர்களின் பட்டியலில் மீண்டும் சேர்க்கப்பட்டார். வடக்கிலும் மற்றும் கிழக்கிலும் அரச அனுசரணையுடன் பௌத்த ஆலய நிருமாணங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வீடு சிங்கள தேசியவாத அரசியல்வாதிகளாலும் மற்றும் அவர்களது ஆதரவாளர்களாலும் சுற்றி வளைக்கப்பட்டது. அதேவேளை, வடக்கிலும் மற்றும் கிழக்கிலும் உள்ள பௌத்த விகாரைகளுக்கு சேதம் விளைவிப்பவர்களின் தலையை வெட்டப்போவதாக மற்றொரு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பகிரங்கமாக அச்சுறுத்தினார்.*

*அரச சார்பற்ற அமைப்புக்கள் செயலகத்தின் கீழ் பதிவு செய்யாப்படாத அரச சார்பற்ற அமைப்புக்கள் எதிர்காலத்தில் தடைசெய்யப்படும் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் எச்சரித்துள்ளார். முல்லைத்தீவு பதில் நீதவானாகக் கடமையாற்றிய முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி டி.சரவணராஜா, உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதையடுத்து, தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டு, நாட்டை விட்டு வெளியேறினார். கொல்லப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு உணவு வழங்கியதற்காக ஜனநாயகத்திற்கான சிலுவைப்போர் கட்சியின் துணைத் தலைவர் என். நகுலேஸ் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழ் கைது செய்யப்பட்டார். பௌத்த மதத்தை அவமதித்ததாகச் சார்த்துரைத்து, முகநூல் பக்கத்தையும், 'பூஸ் புத்தா' (Puss Buddha)('பூனைப் புத்தர்' என்று தளர்வாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) என்ற தலைப்பிலான குழுவையும் நடத்திய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.*

# *2.* கண்ணோட்டம்

### பொருளாதார நெருக்கடிநிலை

இலங்கையின் *2022* வெளிநாட்டுக் கடன் திருப்பிச் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, *3* பில்லியன் அமெரிக்க டொலர் பிணையெடுப்பை சர்வதேச நாணய நிதியம் *[International Monetary Fund (IMF)]* வழங்கியது. இது நாட்டின் உடனடி பொருளாதாரப் பேரழிவை மறுதளையாக்கும் நோக்கம் கொண்டதாகும். உலக உணவுத் திட்டத்தின்படி, ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் *31%* ஊட்டச்சத்துக் குறைபாடுடையவர்கள் என்பதுடன், *17%*க்கும் அதிகமான மக்கள் மிதமான அல்லது கடுமையான உணவுப் பாதுகாப்பின்றி உள்ளனர். பொருளாதார நெருக்கடிநிலைக்கு அரசாங்கத்தினதும் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தினதும் பிரதிபலிப்பின் விளைவாக, இது வாழ்க்கைத் தரத்தையும் மற்றும் மனித உரிமைகளையும் குறைமதிப்பிற்கு உட்படுத்தியது.[1]

பொருளாதார நெருக்கடிநிலையின் விளைவாக, *2022*இல் நாட்டின் வறுமை விகிதம் *25*ஆக அதிகரித்ததுடன், அது மிக உயர்வாக வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஏப்ரல் *2022*இல்[2] இலங்கை தனது கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறிய பின்னர் தொடங்கிய நாட்டின் பெருகிவரும் பொருளாதார நெருக்கடிநிலையைத் தீர்ப்பதற்கு உதவும் முயற்சியாக, சர்வதேச நாணய நிதியம் *(IMF) 20* மார்ச் *2023*[3] அன்று இலங்கைக்கு *3* பில்லியன் அமெரிக்க டொலர் கடனை அனுமதித்தது. மார்ச் மாதத்தில், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பலதரப்பு நிறுவனங்களுக்கு புதிய நிதியுதவி வழங்க *IMF* கடன் வழி வகுத்தது. மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் *(Human Rights Watch)* கூற்றுப்படி, *IMF* திட்டம் அரசாங்க வருமானத்தை அதிகரிப்பதற்கும், ஊழலை எதிர்ப்பதற்கும் அத்துடன் சமூகப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் முன்னுரிமை அளித்தது; ஆயினும்கூட, அதன் வடிவமைப்பு காரணமாக, அது முதன்மையாக குறைந்த வருமானம் கொண்ட தனிநபர்கள் மீது மீளும்தன்மையின் எடையை சுமத்தியதுடன், அவர்களின் சமூக மற்றும் பொருளாதார உரிமைகளையும் அரித்தது. உதாரணமாக, *IMF* உடன்படிக்கையின் ஒரு பகுதியாக, அரசாங்கம் மதிப்பு கூட்டப்பட்ட வரிகளை அதிகரித்தது, எரிபொருள் மானியங்களைப் படிப்படியாக நீக்கியது மற்றும் மின் கட்டணங்களை உயர்த்தியது. இவை அனைத்தும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு பங்களித்தன. *GDP*இன் *0.6* சதவிகித சமூகப் பாதுகாப்பு முன்முயற்சிகளை நோக்கி, சீர்திருத்தப் பொதியின் ஒரு பகுதியாக, ஒரு "சமூகச் செலவிடல் தளம்" செல்ல வேண்டும் எனக் கட்டாயப்படுத்தியது. இது வளரும் நாடுகளுக்கான *1.6* சதவிகித விதிமுறையை விடக் குறைவாகும். போதிய வாழ்க்கைத் தரத்தைக் கொண்டிருக்காத பலர் அரசாங்கத்தின் இலக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் இருந்து விடுபட்டனர். புதிய சமூகப் பாதுகாப்புத் திட்டமான அஸ்வெசும *(Aswesuma)* திட்டத்திற்கு கிடைத்த கிட்டத்தட்ட ஒரு மில்லியன் விண்ணப்பங்கள் பலத்த எதிர்ப்பு இருந்தபோதிலும், மதிப்பீட்டிற்காக அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அஸ்வெசும போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் தனிநபர்களின் பொருளாதாரச் சூழ்நிலையின் அடிப்படையில், தவறுகள், தன்னிச்சையான வெட்டுக்கள், ஊழல் மற்றும் சமூக நம்பிக்கையின்மை ஆகியவற்றிற்கு ஆளாகின்றன என விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

*2022*இல், பல மாதங்களைக் கொண்ட நீண்ட போராட்டங்களினால் அரசாங்கத்தில் இருந்து தனது முன்னோடியான கோத்தபாய ராஜபக்ச வெளியேற தள்ளப்பட்ட பின்னர், கடுமையான பயங்கரவாதத் தடைச் சட்டப் *(PTA)* பிரயோகத்தின் மீதான தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீக்கி எதிர்ப்பை அடக்க முயன்றார். தற்போது முன்வைக்கப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், புதிய உரை தொடர்பான குற்றச்சாட்டுகளை நிறுவுவதுடன், ஜனாதிபதிக்கும், இராணுவத்திற்கும் மற்றும் பொலிஸூக்கும் பரந்த புதிய அதிகாரங்களை வழங்குகின்றது. ஏனைய முன்மொழியப்பட்ட சட்டங்களால் இணையம் மீதான கருத்துச் சுதந்திரம் மேலும் கட்டுப்படுத்தப்படும்.

### போர்க்கால மனித உரிமை மீறல்கள், பொறுப்புக்கூறல் மற்றும் நீதி

*1983* முதல் *2009* வரை, உள்நாட்டுப் போரினால் கடுமையாக தாக்கப்பட்ட இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள கடந்த கால மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் உண்மைக்கும் நீதிக்கும் அழைப்பு விடுக்கும் செயலார்வலர்கள் ஆகியோர் பொலிஸினதும் மற்றும்

[1] https://www.hrw.org/world-report/2024/country-chapters/sri-lanka
[2] https://www.hrw.org/news/2023/03/29/sri-lanka-imf-loan-risks-eroding-rights
[3] https://www.imf.org/en/News/Articles/2023/03/20/pr2379-imf-executive-board-approves-under-the-new-eff-arrangement-for-sri-lanka?cid=em-COM-123-46270

உளவுத்துறையினதும் கண்காணிப்புக்கும் மற்றும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகி வருகின்றனர்.[4] 2009இல் யுத்தம் முடிவடைந்த பின்னர், அரச இராணுவப் படைகளின் கைகளில் விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளினதும் மற்றும் தமிழ் சிவிலியன்களினதும் சட்டத்திற்குப் புறம்பான மரணதண்டனைகள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்படுவது ஆகியன சாதாரணமாகிவிட்டதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கையிட்டுள்ளது. காணாமல் போனவர்களைக் கண்டுபிடிப்பதற்காக நிறுவப்பட்ட அரசாங்கத்தின் காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்[5] *(Office on Missing Persons)* மிகக் குறைவான முன்னேற்றத்தையே கண்டுள்ளது என்று அதே ஆதாரம் வலியுறுத்தியுள்ளது. ஏப்ரல் 2023இல், ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையானது இழப்பீடுகளுக்கான அலுவலகம்[6] மற்றும் காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் ஆகியவற்றின் தாபிப்பையும் மற்றும் செயல்பாட்டையும் குறிப்பிட்டதுடன், குறிப்பாக பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் இருப்பிடத்தையும் மற்றும் தலைவிதியையும் தெளிவுபடுத்துவதில் அவற்றின் முன்னேற்றமின்மையையும் மற்றும் செயலற்றதன்மையையும், அத்துடன் மிக முக்கியமாக, இந்த நிறுவனங்களுக்கு மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய நபர்களின் நியமனங்கள் மற்றும் வழக்குத் தொடரப்படும் வழக்குகளில் தலையீடு செய்தல், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் நீதியைப் பின்பற்றுவதை ஊக்கங்கெடுத்தல் ஆகியனவற்றையும் குறித்த கரிசனைகளை முனைவுபடுத்தின.[7] 2018இன் 34ஆம் இலக்க இழப்பீடுகளுக்கான அலுவலகச் சட்டத்தின் கீழ், சமூக சேவைத் திட்டங்களினால் முன்னாள் போராளிகள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், இழப்பீடுகளைப் பெற முடியும் என்ற அரச தரப்பின் தகவலை இது ஒப்புக்கொள்கிறது. ஆனால், இந்த ஆதாரங்களுக்கும் மற்றும் சுகாதாரப் பராமரிப்பு போன்ற வேறு சேவைகளுக்கும் அவர்களுக்கு சரியான அணுகல் இல்லை என்று அது அறிக்கையிடுகிறது.

இலங்கையின் ஆறாவது காலகட்ட அறிக்கையின் இறுதி அவதானிப்புகளின் அறிக்கை மீது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சர்வதேச உடன்படிக்கையின் அறிக்கையானது கடந்த காலங்களில் மனித உரிமைகளை மீறியவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர நீண்ட காலம் எடுத்துக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கின்றது. உள்நாட்டுச் சட்டத்தின் கீழ் போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகள் ஆகியவை குற்றமாக்கப்படாதது குறித்து அது வருத்தம் தெரிவிக்கின்றது. இலங்கை இராணுவம் அழைக்கப்பட்ட விசாரணை நீதிமன்றம், 2006 மற்றும் 2009க்கு இடையில் இராணுவ நடவடிக்கைகளின் விளைவாக, போர்க்குற்றங்கள் பற்றிய உறுதியான ஆதாரங்கள் இருந்தபோதிலும், பொதுமக்கள் இறப்புகள் எதுவும் இல்லை என்று முடிவு செய்ததாக அதே அறிக்கை மேலும் வெளிப்படுத்தியது. வவுனியா ஜோசப் முகாமில் சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகள் ஆகியன திட்டமிட்ட வகையில் பயன்படுத்தப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டுகள் இன்னும் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை எனவும் அது குறிப்பிட்டுள்ளது. அரசியல் மற்றும் இராணுவப் பணியாளர்கள் தலையிடுவது மற்றும் சட்ட மற்றும் விசாரணை நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பது ஆகியன தொடர்பான செய்திகள் குறித்து குழு தனது அச்சத்தை தெரிவிக்கிறது. அரசியல் பழிவாங்கலின் கூற்றுகளை ஆராய விசாரணைக் குழுவின் பரிந்துரைகள் குறித்து குறிப்பாக அது அக்கறை கொண்டுள்ளதுடன், இதன் விளைவாக பல உயர் மட்ட வழக்குகளில் குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டன. இந்த வழக்குகளில், 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் கடற்படை அதிகாரிகளால் 11 தமிழ் மக்கள் கடத்தப்பட்டமை மற்றும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களான நடராஜா ரவிராஜ் மற்றும் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரின் படுகொலைகள் ஆகியவை அடங்கும். குறிப்பாக மோதலின் போது, போர்க்குற்றம் சுமத்தப்பட்ட இராணுவ அலுவலர்கள் தொடர்ச்சியாக நியமிக்கப்படுகின்றதும், பதவி உயர்வு வழங்கப்படுகின்றதும் அத்துடன் தண்டனையில் இருந்து விடுபடுகின்றதுமான சூழலை உருவாக்கியுள்ளமை கவலையளிக்கிறது.

முஸ்லிம் மற்றும் தமிழ் சிறுபான்மை மக்களின் சொத்துக்களையும் மற்றும் வழிபாட்டுத் தலங்களையும் அரசாங்கம் வலுக்கட்டாயமாக அபகரித்தது.[8] இந்து ஆலயம் இருந்த இடத்தில் பௌத்த நினைவுச் சின்னத்தை நிர்மாணித்த தொல்பொருளியல் திணைக்களத்திற்கு எதிராக தீர்ப்பு வழங்கியதையடுத்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ஒருவர் தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டு, செப்ரெம்பரில் நாட்டை விட்டு வெளியேறினார். அவரது தீர்ப்பின் விளைவொன்றாக நீதிபதிக்கு கொலை மிரட்டல் செய்யப்பட்டது.[9]

---

[4] https://www.hrw.org/news/2023/05/16/still-no-justice-sri-lanka-war-anniversary
[5] http://www.omp.gov.lk/contact/our-offices
[6] http://www.reparations.gov.lk/web/index.php?lang=en
[7] file:///C:/Users/Informa/Downloads/G2306073%20(1).pdf
[8] https://www.hrw.org/report/2023/09/18/if-we-raise-our-voice-they-arrest-us/sri-lankas-proposed-truth-and-reconciliation
[9] https://www.colombotelegraph.com/index.php/mullaitivu-magistrate-district-judge-resigns-after-death-threats/

அடுத்தடுத்த வழக்குத்தொடுப்புக்களில் பயன்படுத்துவதற்காக நாடுகடந்த குற்றங்களின் சாட்சியங்களைச் சேகரிக்கும் நோக்கத்துடன் இலங்கையின் பொறுப்புக்கூறல் கருத்திட்டத்தை[10] தாபிக்கும் 2021இல் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானமொன்றை மீள்பரிசீலனை செய்ய 2024இல் ஐ.நா மனித உரிமைகள் பேரவை திட்டமிடப்பட்டுள்ளது. சபை மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளத் தேவையில்லை என்பதை அரசாங்கங்களை உத்தேச உண்மை ஆணைக்குழு வற்புறுத்தும் என ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் அலுவலகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

### கருத்து சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடல்

தவறாக வழிநடத்தும், அச்சுறுத்தும், பயமுறுத்தும் அல்லது தொந்தரவு தரும் வார்த்தைகளை நிகழ்நிலையில் வெளியிடுவதைத் தடுக்கும் நோக்கத்துடன், செப்ரெம்பரில் நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலத்தை அரசாங்கம் வெளியிட்டது. இருப்பினும், இந்த நடவடிக்கையானது கருத்துச் சுதந்திரத்தை மேலும் கட்டுப்படுத்தும் என்று விமர்சகர்கள் தெரிவித்தனர்.[11]

இலங்கை தொடர்பான ஐ.நா மனித உரிமைக் குழுவின் அறிக்கையின்படி, அமைதியான கூட்டங்களைக் கலைக்க பொலிஸார் அதிகப்படியான பலத்தைப் பயன்படுத்துவது, ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களைப் பயன்படுத்துவது மற்றும் அரசாங்கக் கொள்கைகளுக்கு எதிரான பெரிய அளவிலான போராட்டங்களின் போது பொது மக்களுக்கு சமூக ஊடக அணுகலைத் தடுப்பது ஆகியன உட்பட "கருத்துக்கும் மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கும் கடுமையான கட்டுப்பாடுகள்" உள்ளன. கிழக்கிலும் மற்றும் வடக்கிலும் குறிப்பாக ஒன்றுகூடுவதற்கும் மற்றும் வெளியில் நடமாடுவதற்குமான உரிமையில் கடுமையான கட்டுப்பாடுகள் காணப்பட்டன.[12] சம்பந்தப்பட்டவர்கள் தொடர்ந்துமே குறிவைத்துள்ளவர்களில் செயலார்வலர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் மத்தியில் மனித உரிமைகள் பாதுகாவலர்களும் உள்ளனர்.

### பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள்

தற்போதைய பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ், துஷ்பிரயோகங்கள் குறித்து உள்ளக மற்றும் சர்வதேசக் கண்டனங்களுக்குப் பின்னர், மனித உரிமைகளை மதிக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை இயற்றவிருப்பதாக அரசாங்கம் உறுதியளித்தது. குறிப்பாக, பயங்கரவாத தடைச் சட்டத்தை இல்லாதொழிப்பதாக அதன் 2017 உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கான தனது உறுதிப்பாட்டை புதுப்பிக்குமாறு இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் அழுத்தம் கொடுத்தது. அதன் மனித உரிமை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, GSP+ திட்டத்தின் கீழ், இலங்கைக்கு சுங்க வரியற்ற சந்தை அணுகல் வழங்கப்பட்டுள்ளது.

எனினும், முன்மொழியப்பட்ட மாற்றுச் சட்டமாக விளங்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம்[13], இலங்கையின் சர்வதேசக் கடப்பாடுகளுக்குப் போதுமானதாக இல்லை என்பதுடன், அதன் குடிமக்களின் ஒன்றுகூடலையும் மற்றும் பேச்சு சுதந்திரத்தையும் ஆபத்தில் ஆழ்த்துகிறது.புதிய சட்டம் முதலில் மார்ச் மாதத்தில் அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டது. ஆனால், தவறான புதிய அதிகாரங்களை வழங்கும் அதே வேளையில், PTAஇன் மிகவும் தவறாகப் பயன்படுத்தப்பட்ட பல அதிகாரங்களை இந்தத் திட்டம் வைத்திருக்கும் என்ற பலத்த எதிர்ப்பின் காரணமாக, அது பின்னர் "உசாவுகைகளுக்காக" திரும்பப் பெறப்பட்டது.[14] செப்ரெம்பரில் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்ட போது, பெரிய மாற்றம் இருக்கவில்லை. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் சில திருத்தங்களை வழங்குகிறது. ஆனால், அதன் வார்த்தைகள் தெளிவற்றதாகவும் அத்துடன் பரந்ததாகவும் உள்ளன. அமைதியான போராட்டம் போன்று சட்டவிரோதமாக இருந்த போதிலும், அது பயங்கரவாதத்தின் ஏற்றுக்கொள்ளக்கூடிய வரையறைக்கு அப்பாற்பட்ட நடத்தைகளை அனுமதிக்கிறது. எந்தவொரு ஆதாரமும் இன்றி மக்களைக் கைது செய்ய ஜனாதிபதிக்கும், பொலிஸூக்கும் மற்றும் இராணுவத்திற்கும் மகத்தான அதிகாரத்தை வழங்கும் நோக்கத்துடன் இந்தச் சட்டமூலம் உள்ளதாகத் தோன்றியது. இது தெளிவாக வரையறுக்கப்படாத உரையைக் குற்றமாக்குவதையும், உண்மையான நீதித்துறை மீளாய்வு இன்றி நிகழ்வுகளையும் மற்றும் குழுக்களையும் தடை செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. விமர்சனங்களைப் பெற்றதையடுத்து,

---

[10] https://www.ohchr.org/en/hr-bodies/hrc/sri-lanka-accountability/index

[11] இந்தச் சட்டமூலத்தின் அடுத்தடுத்த வளர்ச்சிகள் இந்த அறிக்கையிலும் மற்றும் INFORMஆல் வெளியிடப்பட்ட வேறு அறிக்கைகளிலும் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளன.

[12] https://www.hrw.org/news/2023/09/18/sri-lanka-abuses-undercut-proposed-truth-commission

[13] chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/http://documents.gov.lk/files/bill/2023/3/304-2023_E.pdf

[14] https://www.hrw.org/news/2023/04/07/sri-lanka-reject-new-counterterrorism-bill

மேலும் திருத்தங்களைச் செய்வதற்காக, ஒக்ரோபரில் சட்டமூலம் பாராளுமன்றத்தில் இருந்து மீளப்பெறப்பட்டது.[15]

**பெண்களின் உரிமை**

பொருளாதார நெருக்கடிநிலை[16] மற்றும் அதற்கு முன் வந்த *COVID-19* தொற்றுநோய் ஆகியவற்றினால் குறைந்த வருமான அடைப்புக்குறிகளிலும் மற்றும் ஆபத்தான வேலைகளிலும் இருந்த பெண்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

முஸ்லிம் சமூகத்தில் திருமணத்தை ஒழுங்குபடுத்தும் முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் *[Muslim Marriage and Divorce Act (MMDA)]*[17] பல கூறுகள், பெண்களினதும் மற்றும் சிறுமிகளினதும் உரிமைகளைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. குறைந்தபட்ச வயதை நிர்ணயிக்காமல், குழந்தைத் திருமணத்தை அத்தகைய ஒரு வாசகம் அனுமதிக்கிறது.[18] இந்தச் சட்டத்தின்படி, காதி (குடும்ப) நீதிமன்றங்களில் நீதிபதிகளாக இருக்க பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை; இதன் விளைவாக, பெண்களுடன் ஒப்பிடும் போது ஆண்கள் எளிதாக விவாகரத்து பெற முடியும்; மற்றும் திருமணம் பதிவு செய்யப்படுவதற்கு முன் ஒரு பெண்ணின் அல்லது இளம் பெண்ணின் சம்மதம் ஆவணப்படுத்தப்பட வேண்டியதில்லை. மேலதிகமாக, குழந்தைத் திருமணத்தை *MMDA* அங்கீகரிக்கும் சூழ்நிலைகளில், வேறு வகையில், சட்டப்பூர்வ பாலியல்வல்லுறவாகக் கருதப்படுவதை தண்டனைச் சட்டம் அனுமதிக்கிறது.[19]

உலகின் கடுமையான கருக்கலைப்பு விதிமுறைகளில் சில இலங்கையில் உள்ளதுடன்,[20] ஒரு பெண்ணின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் சந்தர்ப்பங்களில் தவிர,[21] அனைத்து கருக்கலைப்புகளுக்கும் *1883*இன் தண்டனைச் சட்டத்தின் *303*ஆவது பிரிவின்படி, நீண்ட காலச் சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது.[22]

குறிப்பாக இலங்கையின் அரசியலில் குறைந்த பெண்களின் பங்களிப்பை ஐ.நா. மனித உரிமைகள் குழு முனைவுபடுத்தியுள்ளது.[23]

***LGBTIQ+* உரிமைகள்**

இலங்கையின் தண்டனைச் சட்டத்தின் *(1883)* பிரிவுகள் *365* மற்றும் *365A* ஆகியவை முறையே "இயற்கையின் ஒழுங்கிற்கு எதிரான உடலுறவையும்" மற்றும் "எந்தவொரு மோசமான அநாகரீகமான செயலையும்" தடை செய்கிறது.[24] சொல்லப்பட்ட பிரிவுகளில் பயன்படுத்தப்படும் இந்த விதிமுறைகளை தண்டனைச் சட்டம் வரையறுக்காத போதிலும், இந்த ஏற்பாடுகள் பெரியவர்களுக்கிடையேயான சம்மதத்துடனான ஒரே பாலின உறவுகளைக் குற்றமாக்குவதாகப் பரவலாகக் கருதப்படுகின்றன.[25]மேலும், "ஆள்மாறாட்டம் மூலம் ஏமாற்றுதல்" என தண்டனைச் சட்டத்தின் பிரிவு *399* குற்றமாக்குவதுடன், தனிப்பட்ட மூன்றாம் பாலினத்தவரைக் குறிவைக்கவும் பொலிஸாரால் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது. தெருச்சுற்றல் கட்டளைச் சட்டத்தின் *(1842)*[26] அலைந்து திரியும் விதிகள் பெரும்பாலும் பாலின இணக்கம் மற்றும் *LGBTIQ+* தனிநபர்களை மிரட்டுதல், காவலில் வைத்தல் மற்றும் விசாரணை செய்தல் ஆகியவற்றுக்காக அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன. ஒரே பாலின உறவுகளைக் குற்றமற்றதாக்க, ஒரு தனியார் உறுப்பினர் சட்டமூலம் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், ஆனால், அது இன்னும் வாக்கெடுப்புக்கு கொண்டு வரப்படவில்லை.

---

[15] https://economynext.com/sri-lankas-anti-terrorism-bill-removed-from-parliaments-order-paper-135764/
[16] https://www.thenewhumanitarian.org/photo-feature/2022/09/13/Sri-Lanka-economic-crisis-women-workers-inflation-wages
[17] chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/http://www.commonlii.org/lk/legis/consol_act/mad134294.pdf
[18] chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://www.veriteresearch.org/wp-content/uploads/2018/05/Verit%C3%A9-Brief_Muslim-Marriage-and-Divorce-Act.pdf
[19] https://natlex.ilo.org/dyn/natlex2/r/natlex/fe/details?p3_isn=74477&cs=12zxqwc8VdNbX599PRUx5uOk1ALxqn9oIBqsdY8Ova9_p36Eof01o3DowNQyfGUl3hT2cbjefeczrNs46Vc6ZOA
[20] https://www.hrw.org/news/2022/03/10/reform-sri-lankas-draconian-abortion-law
[21] https://groundviews.org/2018/09/02/abortion-where-is-sri-lanka-on-the-spectrum/
[22] chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/http://hrlibrary.umn.edu/research/srilanka/statutes/Penal_Code.pdf
[23] https://www.hrw.org/news/2023/03/30/un-paints-bleak-picture-rights-sri-lanka
[24] https://www.icj.org/sri-lanka-ensuring-equality-and-non-discrimination-for-lesbian-gay-bisexuals-and-transgender-people/
[25] https://www.hrw.org/news/2022/03/23/un-body-condemns-sri-lankas-criminalization-same-sex-acts
[26] chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/http://hrlibrary.umn.edu/research/srilanka/statutes/Vagrants_Ordinance.pdf

# *3. விடயப் புதுப்பிப்புகள்*

***ஜனவரி 2023***

*மறைந்த ‘சண்டே லீடர்’ ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் 14ஆவது நினைவு தினம் கொழும்பிலும் மற்றும் மட்டக்களப்பிலும் நடைபெற்றது. சர்ச்சைக்குரிய புனர்வாழ்வுப் பணியகச் சட்டமூலத்தைப் திருத்தங்களுடன் பாராளுமன்றம் நிறைவேற்றியது. இது முன்னர் அரசாங்கத்தை எதிர்ப்பவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் முயற்சியாக பரவலான விமர்சனங்களை ஈர்த்ததுடன், இப்போது போதைப்பொருள் புனர்வாழ்வில் பிரத்தியேகமாக கவனம் செலுத்துகிறது. எனினும், புனர்வாழ்வு நிலையங்களில் சித்திரவதை மற்றும் மோசமாக நடத்துதல் ஆகியவற்றுக்கு இச்சட்டமூலம் வசதியளிக்கும் என சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் ஏனைய சிவில் சமூகச் செயலார்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளது/யுள்ளனர்.*

*பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் சம்மேளனத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே பயங்கரவாதக் குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டார். ஆனால், மேலும் பல வழக்குகள் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான பிக்கு சம்மேளனத்தின் அழைப்பாளர் கல்வெவ சிறிதம்ம தேரரை பயங்கரவாத விசாரணைப் பிரிவில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.*

*உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலை முன்னரே அறிந்திருந்தும், முன்னாள் ஜனாதிபதியும் மற்றும் பாதுகாப்பினதும் மற்றும் பொலிஸினதும் முக்கிய அலுவலர்களும் தடுக்கத் தவறியதாகவும், அதனால் பாதிக்கப்பட்டவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் மீஉயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடாக மொத்தமாக 310 மில்லியன் இலங்கை ரூபாவை வழங்குமாறு உத்தரவிடப்பட்டது. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில், கோட்டை நீதவான் வழங்கிய அழைப்பாணையை நிராகரிக்குமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி சிறிசேன தாக்கல் செய்த எழுத்தாணை மனு ஜனவரி 31 அன்று விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.*

*இரண்டரை வருடங்களுக்கு முன்னர் தமிழ்த் தியாகி ஒருவரை நினைவு கூர்ந்தமைக்காக முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்திற்கு நீதிமன்ற அழைப்பாணையொன்றை கொழும்பு மேல் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.*

*அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு பிணை வழங்கிய நீதித்துறையை விமர்சித்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவிற்கு எதிராக சட்டமா அதிபர் நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டை தாக்கல் செய்துள்ளார்.*

***பெப்ரவரி 2023***

*பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் [Inter-University Student Federation (IUSF)] அழைப்பாளர் வசந்த முதலிகே, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) கீழ் பல மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டு, அந்த மாதத்தில் பிணையில் விடுவிக்கப்பட்டார். காவலில் வைக்கப்பட்டிருந்த போது, பல பொலிஸ் உத்தியோகத்தர்கள் தன்னை அச்சுறுத்தியதாக அவர் குற்றஞ்சாட்டினார். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, மார்ச் 2020இல் நடைபெற்ற மௌனப் போராட்டத்தில் பங்கேற்றதற்காக கைது செய்யப்பட்டு, சட்டவிரோதமாக ஒன்றுகூடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இருபது மாணவ செயலார்வலர்களுக்கு விதிக்கப்பட்ட பிணை நிபந்தனைகளை 6 பெப்ரவரி 2023 அன்று கோட்டை நீதவான் பிரசன்ன அல்விஸ், நீக்கினார்.*

*ஜனாதிபதி மாளிகையை 9 ஜூலை 2022 அன்று கையகப்படுத்திய போது, அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களால் கண்டுபிடிக்கப்பட்டு, திருப்பியளிக்கப்பட்ட பணத்தை மீள வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சட்டத்தரணி செய்த கோரிக்கை கொழும்பு நீதவான் திலின கமகேவினால் நிராகரிக்கப்பட்டது.*

*2022 நொவம்பரில் தலைமை எதிர்க்கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான ஆர்ப்பாட்டப் பேரணியில் சட்டவிரோதமாக ஒன்றுகூடிய குற்றச்சாட்டின் கீழ் 13 பெண் அரசியல்வாதிகளைப் பொலிஸார் கைதுசெய்தது தொடர்பான விசாரணைகளின் முன்னேற்ற அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு கொழும்பு பிரதான நீதவான் உத்தரவிட்டார்.*

*உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு எதிராக முன்னாள் இராணுவ அலுவலர்யொருவர் தாக்கல் செய்த எழுத்தாணை மனு மீஉயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், அத்தியாவசியச் சேவைகளுக்கு அரசாங்கத்தின் நிதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், தேர்தலுக்கான நிதியை விடுவிக்க முடியாது என நீதிமன்றத்தில் நிதியமைச்சு தெரிவித்துள்ளது. இந்த வழக்கு மே 2023க்கு மேலதிக விசாணைக்காக ஒத்திவைக்கப்பட்டது.*

*தேர்தலை நடத்துவதற்கு எதிராக மற்றுமொரு எழுத்தாணை மனு மாத்தறை மாநகர சபையின் அரசியல் குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மீஉயர் நீதிமன்றத்தால் அவர்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டு, தள்ளுபடிசெய்யப்பட்டது. பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்காததன் அடிப்படையில், அரசாங்க செய்தித் திணைக்களம் ஊடகவியலாளர் ஒருவரின் இணையத்தளத்தை பதிவு செய்யாததன் மூலம், அவரது உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) முடிவு செய்துள்ளது.*

***மார்ச் 2023***

*ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான புதிய திகதி ஏப்ரல் 25 என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. 2023இல் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக நிதியமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை அரசாங்க வரவு-செலவுத்திட்டத்தில் நிறுத்தி வைப்பதைத் தடுக்கும் இடைக்கால உத்தரவை மீஉயர் நீதிமன்றம் பிறப்பித்தது. எனினும், மீஉயர் நீதிமன்றத்தின் உத்தரவின்படி, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு போதிய நிதியை விடுவிப்பது சாத்தியமில்லை என தேர்தல் ஆணையாளர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்காக கடனாகப் பெறப்பட்ட கடதாசிகளுக்கும் மற்றும் பிற பொருட்களுக்குமான கொடுப்பனவுகளைச் செயலாக்குவதில் மேலும் தாமதம் ஏற்பட்டால், கடதாசியையும் மற்றும் உபகரணங்களையும் திருப்பித் தருமாறு விநியோகஸ்தர் கேட்கலாம் என்று அரசாங்க அச்சாளர் கங்கானி லியனகே தெரிவித்தார். தேர்தலை மேலும் ஒத்திவைப்பதற்கான சாத்தியமான புதிய யுக்தியாக இதை சில இணையத்தளங்கள் எதிர்வுகூறியுள்ளன.*

*இரு தசாப்தங்களுக்கு முன்னர் காலாவதியான கண்ணீர்ப்புகைக் குண்டுகளை இலங்கைப் பொலிஸார் பயன்படுத்தியுள்ளதாக சுயாதீன விசாரணை அறிக்கை ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது. 9 மே 2022 அன்று காலிமுகத் திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீதான தாக்குதல்களைத் தடுக்கத் தவறியமைக்காக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனைக் கைது செய்யுமாறு கோரிய எழுத்தாணை மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்தது.*

*வசந்த முதலிகேயின் விடுதலைக்கு எதிராக சட்டமா அதிபர் [Attorney General (AG)] தாக்கல் செய்த மீளாய்வு மனு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள ஒருவரை விடுவிக்க நீதவான் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என சட்டமா அதிபர் வாதிட்டார்.*

*கண்ணீர் புகைக்குண்டு தாக்கப்பட்டு உயிரிழந்த போராட்டக்காரர் ஒருவரின் மரணம் தொடர்பான வழக்கை விசாரித்த நீதவான், கண்ணீர்புகைக் குண்டுகள் தொடர்பாக இரு வாரங்களுக்குள் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு இலங்கைப் பொலிஸின் பொது ஒழுங்கு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளருக்கு உத்தரவிட்டார்.*

*நாட்டின் பொருளாதார நெருக்கடிநிலைக்கு தமது பொறுப்புக்கூறல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் மற்றும் ஏனையோருக்கும் முன்னர் விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத்தடையை மீஉயர் நீதிமன்றம் நீக்கியுள்ளது.*

*மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாயக்கவுக்கு எதிரான குற்றச்சாட்டை மேன்முறையீட்டு நீதிமன்றம் இரத்து செய்துள்ளது. இராஜாங்க அமைச்சர் டயானா கமகேயின் குடியுரிமை மற்றும் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து சட்டவிரோதமான முறையில் இலங்கை கடவுச்சீட்டைப் பெற்றமை ஆகியன தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அமைச்சருக்கு எதிராக போதிய ஆதாரங்கள் இருந்தும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (CID) அமைச்சரைக் கைது செய்யவில்லை என மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.*

*பல்வேறு விசாரணைகளுக்காக வெளியே அழைத்துச் செல்லப்படும் பொலிஸ் காவலில் உள்ள சந்தேக நபர்களின் மரணத்தைத் தடுப்பதற்கான வழிகாட்டுதல் தொகுப்பொன்றைத் தயாரிப்பதற்கான உத்தரவைப்*

*புறக்கணித்த குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் மா அதிபருக்கு (IGP) எதிராக அழைப்பாணையை மீஉயர்நீதிமன்றம் அனுப்பியுள்ளது.*

***ஏப்ரல் 2023***

*ஏப்ரல் 2022இல், ரம்புக்கனையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியது தொடர்பான HRCSLஇன் இறுதி அறிக்கை வெளியிடப்பட்டது. அதிக சக்தியைப் பொலிஸ் பயன்படுத்தியதுடன், இது ஒரு எதிர்ப்பாளரின் மரணத்தையும் மற்றும் பதினெட்டு பேருக்கு காயத்தையும் ஏற்படுத்தியது எனக் கண்டறியப்பட்டது. ஒரு பத்திரிகை அறிவிப்பை வெளியிட்ட HRCSL, குடிமக்களின் அடிப்படை உரிமைகளில் உத்தேச ATA தலையிடுகிறது எனக் குறிப்பிட்டுள்ளது.*

*இரட்டைக் குடியுரிமை பெற்றதாகக் கூறப்படும் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேயின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தகுதி நீக்கம் செய்ய உத்தரவிடக் கோரிய மனுவின் தீர்ப்பை ஜூன் மாதம் வழங்குவதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் [Court of Appeal (CoA)] அறிவித்துள்ளது. முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டீ லிவேரா தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில், உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணைகள் குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை தொடர்பாக பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு (TID) அழைக்கப்படுவதைத் தடுக்கும் இடைக்கால உத்தரவையும் CoA பிறப்பித்தது. 2022இல், அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்களுடன் தொடர்புடைய பல நிகழ்வுகள் தொடர்பாக சந்தேக நபராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் (SDIG) தேசபந்து தென்னகோனை கைது செய்வதிலிருந்தும் அல்லது பெயரிடுவதிலிருந்தும் பொலிஸாரைத் தடுக்கும் இடைக்கால உத்தரவை CoA வழங்கியது. மார்ச் 2023இல், நீதிக்கு புறம்பான கொலை வழக்கை விசாரித்து பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவுக்கு பதிலளிக்கும் விதமாக, பொலிஸ் காவலில் 'என்கவுன்டர்' மரணங்களைத் தடுக்க பொலிஸ் வழிகாட்டுதல்களை வகுத்துள்ளதாக மீஉயர் நீதிமன்றத்தில் பொலிஸ் மா அதிபர் (IGP) தெரிவித்தார். மஹர சிறைச்சாலையில் 11 கைதிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலான நீதவான் விசாரணைகளை வெலிசர நீதவான் நீதிமன்றம் நிறைவு செய்துள்ளதுடன், துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட சிறைச்சாலை அலுவலர்களைக் கைது செய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளது. எனினும், எவரும் கைது செய்யப்படவில்லை என்பதுடன், இந்த உத்தரவை எதிர்த்து மேன்முறையீடு செய்யப் போவதாக சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.*

***மே 2023***

*'தமிழ் கார்டியன்' ஊடகவியலாளர் சண்முகன் தவசீலனை 2019 ஏப்ரலில் அச்சுறுத்தியதற்காக கடற்படை புலனாய்வு அலுவலர் ஒருவருக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.*

*கடந்த ஆண்டு காலிமுகத் திடலில் போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல் தொடர்பான நீதவான் விசாரணை தொடர்பில், முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உட்பட மூவருக்கு விதிக்கப்பட்ட பயணத்தடையை நீக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 9 மே 2022 அன்று, காலிமுகத் திடல் போராட்டக்காரர்கள் மீதான தாக்குதலைத் தொடர்ந்து வன்முறையைத் தடுக்கத் தவறியதாகக் கூறப்படும் பொலிஸ் மற்றும் இராணுவத் தலைவர்களுக்கு எதிராக அமைச்சர்கள் மற்றும் அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பல தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை மனுவானது, மீண்டும் விசாரணை நடத்தப்படும் என சம்பந்தப்பட்டவர்களால். வழங்கிய உறுதிமொழியைத் தொடர்ந்து மனுதாரர்களால் வாபஸ் பெறப்பட்டது.*

*அனுமதியின்றி சட்டவிரோத கருத்தடை அறுவைச் சிகிச்சைகளை மேற்கொண்டதாக தேசியவாத ஊடகங்கள் முன்வைத்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் முன்னர் அநியாயமாக தனது பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட டொக்டர் ஷாபி ஷிஹாப்தீன், அதே மருத்துவமனையில் தனது பணியை மீண்டும் தொடங்கினார்.*

*'யூடியூபரும்' மற்றும் அரசியல் வலைப்பதிவாளருமான (blogger) தர்ஷன ஹந்துங்கொடவுக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை மே 24 அன்று வரை நீடிக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 2007இல், அரச ரூபவாஹினிக் கூட்டுத்தாபன வளாகத்திற்குள் பலவந்தமாகப் பிரவேசித்து, ஊடகவியலாளர்களை அச்சுறுத்திய முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிரான வழக்கின் விசாரணை சம்பவம் நடந்து 15 வருடங்களின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டது.*

***ஜூன் 2023***

*தேசிய தொழில் ஆலோசனைக் குழுவின் [National Labour Advisory Council (NLAC)[ ஒரே பெண் உறுப்பினர் நீக்கப்பட்டமை தொடர்பில் தொழில் அமைச்சு பதிலளித்தது. NLAC உறுப்பினர் சேர்க்கைக்கான புதிதாக அமுல்படுத்தப்பட்ட தேர்வு அளவுகோல்களை அவர் நியமனம் செய்யாததால் நீக்கம் செய்யப்பட்டதாகக்*

*கூறி தங்கள் செயலை அமைச்சு நியாயப்படுத்தியது. இந்த அளவுகோல் அமைச்சினால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிக பிரதிநிதித்துவத் தொழிற்சங்கங்களுக்கு பரிந்துரைகளை வரம்பிடுவதுடன், தமது செயல்பாட்டில் பாலின அடிப்படையிலான பாகுபாடுகளையும் மறுத்துரைத்த.து*

*முன்மொழியப்பட்ட ஒலிபரப்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுச் சட்டம் (BRCA) அரசியல்ரீதியாக நியமிக்கப்பட்ட அமைப்பு மூலம் ஊடகத் துறையைக் கட்டுப்படுத்தும் முயற்சியாக செயலார்வலர்களாலும் மற்றும் ஊடக உரிமை வழக்கறிஞர்களாலும் பரவலாக விமர்சிக்கப்பட்டது. இதற்கு பதிலளித்த நீதியமைச்சர், அவர்கள் பயனுரித்தாளர்களுடன் பகிர்ந்து கொண்ட வரைவு ஆவணமானது வரைவு சட்டமூலம் அல்ல, முன்மொழிவுகளின் தொகுப்பாகும் என்பதுடன், ஊடக நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே வரைவு சட்டமூலம் உருவாக்கப்படும் எனக் கூறினார். எனினும், ஊடகத்துறை அமைச்சருக்கு இலங்கை ஒலிபரப்புக் கழகம் கடிதம் எழுதி, உத்தேசமான சட்டமூலத்தை உடனடியாகத் திரும்பப் பெறுமாறு அரசாங்கத்திடம் கோரியுள்ளது.*

*ஊழல் தடுப்புச் சட்டத்தில் [Anti-Corruption Act (ACA)] 25க்கும் மேற்பட்ட வாசகங்கள் அரசியலமைப்புக்கு முரணானவை என்று மீஉயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. நாட்டில் ஊழல் பாதிப்புகளைக் கவனத்திற்கெடுப்பதற்கான தேவைக்கு சர்வதேச நாணய நிதியத்துடன் [International Monetary Fund (IMF)] அரசாங்கம் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவுடன், பாராளுமன்றத்தில் ஊழல் தடுப்புச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டது.*

*2020இல், கொழும்பில் நடைபெற்ற அமைதியான போராட்டத்தின் போது ஆர்ப்பாட்டக்காரர்களை தன்னிச்சையாக்க கைது செய்த வழக்கு தொடர்பாக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கும் மற்றும் ஏனைய பொலிஸ் அலுவலர்களுக்கும் எதிரான அடிப்படை உரிமை மனுவைத் தொடர்வதற்கு மீஉயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.*

***ஜூலை 2023***

*2018இல், உயிர்த்த ஞாயிறு வெடிகுண்டு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னாள் அதிபர் சிறிசேன மற்றும் ஏனையோர் 9%க்கும் குறைவான இழப்பீடு தொகையை நீதிமன்ற உத்தரவிட்டபடி ஆறு மாத காலக்கெடு முடிவதற்குள் ஜனவரியில் வழங்கியுள்ளனர்.*

*2010இல், காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட வழக்கில், 8 தொலைபேசி இலக்கங்கள் தொடர்பிலான மேலதிக ஆதாரங்களை முன்வைக்க நீதிமன்றத்தின் அனுமதியை சட்டமா அதிபர் கோரினார்.*

*பெண் மேடை நகைச்சுவையாளரான நடாஷா எதிரிசூரியவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் பிணை வழங்கியது. பிணை உத்தரவில் சர்வதேச சட்டத்தின் பரந்த அம்சங்களைக் கருத்தில் கொண்டு, ICCPRஇன் மிகவும் முற்போக்கான விளக்கம் அடங்கும். அண்மையில் கைது செய்யப்பட்ட பெண் நகைச்சுவையாளரைக் கண்டித்து தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்துமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை செல்லுபடியாக்குமாறு கோரி ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன தாக்கல் செய்த மீளாய்வு மனுவை கொழும்பு மேல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.*

*இலங்கையில் உள்ள சுவிஸ் தூதரகத்தின் முன்னாள் ஊழியர் கார்னியா பன்னிஸ்டர் பிரான்சிஸூக்கு, நாடு கடத்தப்பட்ட பொலிஸ் அலுவலரின் 'விசா' நடைமுறையில் ஈடுபட்டதற்காக அறியப்படாத ஐந்து ஆண்களால் தாக்கப்பட்டு பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளானதாக சட்டத்தை அமுல்படுத்தும் அலுவலர்களிடம் பொய்யான அறிக்கையை வழங்கிய குற்றச்சாட்டில் பதினைந்து ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரு ஆண்டு கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.*

*மாணவர் செயலார்வலர் வசந்த முதலிகே, மூன்று வருடங்களுக்கு முன்னர் அவர் கலந்து கொண்ட போராட்டம் தொடர்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகாத காரணத்தினால் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டார். 2022 மே மாதம் காலிமுகத் திடல் போராட்டக்காரர்கள் மீதான கும்பல் தாக்குதலை தடுக்காதது தொடர்பாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு விதிக்கப்பட்ட பயணத்தடையை நீதவான் இரத்துச் செய்தார்.*

*நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவிற்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் திகதி இவ்வருடம் செப்ரெம்பர் 27 எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*31 மார்ச் 2022 அன்று, அரகலய அரசாங்க எதிர்ப்புப் போராட்டத்திற்கு பின்னர் வழிவகுத்த மிரிஹானா போராட்டத்தில் பங்கேற்றவர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் கைதுகள் ஆகியன தொடர்பான இரு அடிப்படை உரிமை மனுக்களையும் மீஉயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. மே 2022இல் காலிமுக எதிர்ப்பாளர்கள் மீதான கும்பல் தாக்குதல்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்காமை தொடர்பான மனுக்களையும், அரசு வழக்கறிஞர்கள் எழுப்பிய ஆரம்ப ஆட்சேபனை காரணமாக தொடர விடுப்பு வழங்க மறுத்து அது தள்ளுபடி செய்தது. எனினும், 2022 மே மாதம் காலிமுகத் திடலில் போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல் தொடர்பான மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், பொலிஸ் மா அதிபரை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டது.*

*ஆர்ப்பாட்டக்காரர்களால் ஜனாதிபதி வளாகத்தில் காணப்பட்ட 17.85 மில்லியன் ரூபா பணம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வாக்குமூலம் பதிவு செய்ய எதிர்பார்ப்பதாக நீதிமன்றத்தில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் நான்கு சந்தேகநபர்கள் தமக்கு எதிரான பணம் தூய்மைப்படுத்தல் வழக்கில் இருந்து தங்களை விடுவிக்குமாறு நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.*

*தேர்தலை நடத்தாமல் உள்ளூராட்சி மன்றங்களை மீண்டும் கூட்டுவதற்கு முன்மொழியப்பட்டுள்ள தனியார் உறுப்பினர் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது என நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.*

*திருத்தப்பட்ட சட்டமூலத்தில் முன்மொழியப்பட்ட 196 திருத்தங்களும் சேர்க்கப்பட்டதால், ஊழல் தடுப்புச் சட்டம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.*

**ஓகஸ்ட் 2023**

*குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (CID) முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர மற்றும் நாடுகடத்தப்பட்ட இன்ஸ்பெக்டர் நிஷாந்த டீ சில்வா ஆகியோர் உட்பட மேலும் மூவர், விசாரணையின் போது பொய்யான சாட்சியங்களைத் தயாரித்த குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டனர். மனித உரிமை செயலார்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர் மீதான தாக்குதல்கள், கொலைகள் மற்றும் காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் ஆகியன தொடர்பான குற்றங்கள் மீதான பல உயர்தர வழக்குகளை ஷானி அபேசேகர கையாண்டார்.*

*2023 ஜனவரியில் நடந்த போராட்டத்தின் போது கைது செய்யப்பட்ட இரு மாணவர் செயலார்வலர்கள் 200 நாட்கள் காவலுக்குப் பிறகு பிணை பெற்றனர். இருப்பினும், பின்னர் அவர்கள் பகிடிவதையில் ஈடுபட்டதாக்க குற்றஞ்சாட்டப்பட்டனர்.*

*ஊடகங்களுக்கு சுகாதாரப் பணியாளர்கள் அறிக்கை வெளியிடுவதைத் தடைசெய்யும் அண்மைய சுற்றறிக்கை தொடர்பில் தொழிற்சங்கங்களுடன் சுகாதார அமைச்சு கலந்துரையாடலை நடத்தியது. அதைத் தொடர்ந்து, தொழிற்சங்கங்களுக்கு இந்தத் தடை பொருந்தாது என்று அமைச்சு உறுதியளித்ததைத் தொடர்ந்து, ஒரு தொழிற்சங்கம் அடையாள தொழிலாளர் வேலைநிறுத்தம் நடத்தும் திட்டத்தை மீளப்பெற்றது.*

*உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு [domestic debt restructuring (DDR)] செயல்முறை குறித்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை எதிர்த்து, நிறுவனங்களுக்கு இடையேயான ஊழியர் தொழிற்சங்கம் (Inter-Company Employees Union) தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவை மீஉயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. DDR தொடர்பான உள்நாட்டு வருமானச் சட்டமூலத் திருத்தத்தின் மீது வேறொரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவினால் எழுப்பப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனைகள் தொடர்பான வாய்மூலச் சமர்ப்பணங்களை எதிர்வரும் ஒக்ரோபர் 27 அன்றுக்கு நீதிமன்றம் ஒத்திவைத்தது.*

*சர்ச்சைக்குரிய MiG ஒப்பந்த வழக்கில் முக்கிய சந்தேக நபர் ஒருவருக்கு விதிக்கப்பட்டிருந்த பயணத்தடையை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் தற்காலிகமாக நீக்கியுள்ளது. 2009இல், ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் கொலைக்கு MiG ஒப்பந்தத்தை அம்பலப்படுத்தியமையே மிக நெருங்கிய காரணம் என நம்பப்படுகிறது. முல்லைத்தீவில் கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில்*

*ஆரம்பமான அகழ்வுப் பணிகள் நிதி ஒதுக்கீடு செய்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக செப்ரெம்பர் மாத ஆரம்பத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.*

*அரசாங்கத்தினாலான இலங்கையின் சுதந்திர தினக் கொண்டாட்டங்களையும் அத்துடன் தமிழ் சமூகங்களின் உரிமைகளை உறுதி செய்யாததையும் கண்டித்து, கடந்த பெப்ரவரியில் அவர்கள் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக ஓகஸ்ட் மாதம் பலர் கைது செய்யப்பட்டனர்.*

*ஆணையொன்றை தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு [Right to Information (RTI) Commission] பிறப்பித்த போதிலும், கடந்த ஆண்டு ஊடகவியலாளரும் மற்றும் ஊடக உரிமை செயலார்வலருமான தரிந்து ஜயவர்தன மீது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பான பொலிஸ் விசாரணைகளின் முன்னேற்றம் குறித்த தகவல்களை வழங்க பொலிஸார் தவறிவிட்டனர்.*

***செப்ரெம்பர் 2023***

*அரசுக்குச் சொந்தமான 'சிலுமின' செய்திப்பத்திரிகை மற்றும் அதன் அரசுக்குச் சொந்தமான பத்திரிகை நிறுவனமான ANCL ஆகியவற்றின் ஊடகவியலாளர் ஃபவ்ஸ் மொஹமட்டுக்கு எதிராக இலங்கை கிரிக்கெட்டினால் [Sri Lanka Cricket (SLC)] பெறப்பட்ட சார்த்துரைக்கப்பட்ட அவதூறு மீதான தடை உத்தரவுகளைக் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நீக்கியது.*

*சமூக ஊடக வர்ணனையாளர் ரம்சி ரசீக் கைது செய்யப்பட்டு 3 ஆண்டுகளுக்குப் பின்னர், அவர் மீதான குற்றச்சாட்டுகளை ஆதரிக்க எந்த ஆதாரமும் இல்லை என கொழும்பு நீதவான் தீர்ப்பளித்ததினால் இறுதியாக விடுதலைசெய்யப்பட்டு, விடுவிக்கப்பட்டார். அவர் ஏப்ரல் 2020இல் கைது செய்யப்பட்டதுடன், அவர் வெளியிட்ட முகநூல் பதிவின் காரணமாக ICCPR சட்டத்தின் கீழ் அண்ணளவாக 5 மாதங்கள் காவலில் வைக்கப்பட்டார். கவிஞர் அஹ்னாப் ஜஸீம் தான் கற்பித்த பாடசாலையில் தீவிரவாதக் கருத்துக்கள் எதையும் கற்பிக்கவில்லை அல்லது ஊக்குவித்தார் என்று சாட்சிகள் மறுத்துள்ளதனால், ஜஸீமுக்கு எதிரான வழக்கைத் தொடர அவர்கள் உத்தேசம் உள்ளதா என்பதை நீதிமன்றத்திற்குத் தெரிவிக்க இரு மாத கால அவகாசத்தை சட்டமா அதிபர் கோரினார். கொடூரமான பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழ் 2020 மே மாதம் கைது செய்யப்பட்ட ஜசீம், 19 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டு, 2021 டிசம்பரில் பிணை பெற்றார். சர்வமத நல்லிணக்கத்திற்காக வாதிடும் பௌத்த பிக்குவான வட்டரேக விஜித தேரர் 2014இல் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மகாநாட்டை குழப்பியதாக பொது பல சேனாவின் ஞானசார தேரர் உள்ளிட்ட தீவிரவாதப் பௌத்த பிக்குகள் குழு குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து, விஜித தேரருக்கு நட்டஈடு வழங்குமாறு குற்றவாளிகளுக்கு உத்தரவிடப்பட்டது.*

*பிரித்தானிய வலைப்பதிவாளர் பிரேசர் நாட்டிலிருந்து பாதுகாப்பாகச் செல்வதற்கு உத்தரவாதம் அளிக்கப்படும் என இலங்கை அரசாங்கத்திடம் இருந்து எழுத்துப்பூர்வமான உறுதிமொழியைப் பெறுவதற்கு பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் முயற்சித்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கடந்த ஆண்டு, பிரேசரின் கடவுச்சீட்டு இலங்கை அலுவலர்களால் பறிமுதல் செய்யப்பட்டதுடன், இலங்கையில் அரசுக்கு எதிரான போராட்டங்களின் புகைப்படங்களைச் சமூக ஊடகங்களில் வெளியிட்டதற்காக நாடு கடத்தும் உத்தரவு பின்னர் பிறப்பிக்கப்பட்டது.*

*2015 ஜனாதிபதித் தேர்தலின் போது, தேர்தல் வன்முறைகள் தொடர்பான கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபரைக் கைது செய்யாமல் இருக்க கஹவத்தை பொலிஸ் நிலைய அலுவலர்களில் செல்வாக்கு செலுத்திய குற்றத்திற்காக SDIG லலித் ஜயசிங்க என்ற ஓர் ஓய்வுபெற்ற பொலிஸ் அலுவலருக்கு 5 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. மார்ச் 2022இல், பல அரசியல்வாதிகள் உட்பட குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் கொலை வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டு, விடுவிக்கப்பட்டனர்.*

*உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புச் செயல்பாட்டில் மேலதிக நிதியைப் பயன்படுத்த முற்பட்ட சர்ச்சைக்குரிய உள்நாட்டு வருமானச் சட்டமூலம் இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டமூலத்திற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட பல அடிப்படை உரிமை மனுக்களை மீஉயர் நீதிமன்றம் கடந்த மாதம் தள்ளுபடி செய்தது.*

*கடந்த செப்ரெம்பரில், முல்லைத்தீவில் உள்ள கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது, மொத்தமாக 18 பேரின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அகழ்வாராய்ச்சிப் பணிகள் பாதியில் நிறுத்தப்பட்ட நிலையில், தற்போதைய கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் நீதிமன்றத்தில் அறிக்கையை விசாரணைக் குழு சமர்ப்பிக்கும் என*

எதிர்பார்க்கப்பட்டது. சர்ச்சைக்குரிய குருந்தூர் மலை தொல்பொருள் அமைவிடம் தொடர்பான நீதிமன்ற விசாரணையின் போது, முல்லைத்தீவு நீதவான் டி.சரவணராஜா, அந்த இடத்தில் புதிய கட்டுமானங்களைத் தடுக்கும் முந்தைய நீதிமன்ற உத்தரவைப் பின்பற்றத் தவறியதால், தொல்பொருள் திணைக்களம் பொறுப்புக்கூற வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

***ஒக்ரோபர் 2023***

*முன்மொழியப்பட்ட இரு அடக்குமுறைச் சட்டங்கள், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (ATA) மற்றும் நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் ஆகியவை செப்ரெம்பர் நடுப்பகுதியில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டன. மீஉயர் நீதிமன்றத்தில் மொத்தம் 46 சிறப்பு நிர்ணய மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன..[27] இது சிவில் சமூக அமைப்புகள்[28] மற்றும் செயலார்வலர், வழக்கறிஞர் கூட்டுக்கள்[29], ஊடக அமைப்புக்கள்[30], ஊடக நிறுவனங்கள்[31], தொழிற்சங்கங்கள்[32], ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், அரசியல் கட்சிகள்[33] மற்றும் ஏனையவை[34] ஆகியவற்றினால் நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலத்தின் அரசியலமைப்புச் சட்டத்தை சவால் செய்யும் வகையில் தாக்கல் செய்யப்பட்டது. இந்தச் சட்டமூலம் அரசியலமைப்பிற்கு முரணானது அல்ல என்றும், அதன் ஏற்பாடுகளில் 31க்குச் செய்யப்பட்ட திருத்தங்களுக்கு உட்பட்டு ஓர் எளிய பெரும்பான்மையால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படலாம் என்றும் மீஉயர் நீதிமன்றம் நிர்ணயித்தது..[35] பாராளுமன்ற சபாநாயகருக்கு இரகசியமாக வழங்கப்பட்ட தீர்ப்பு இன்னும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. இந்தச் சட்டமூலம் குறித்து, முக்கிய சமூக ஊடக நிறுவனங்களையும் மற்றும் இணையதள ஜாம்பவான்களைகளையும் உள்ளடக்கிய சர்வதேச பத்திரிகையாளர் கூட்டமைப்பு [International Federation of Journalists (IFJ)][36], சர்வதேச சட்டவல்லுனர் ஆணைக்குழு (ICJ) [International Commission of Jurists (ICJ)],[37] ஆசிய இணையதளக் கூட்டமைப்பு [Asia Internet Coalition (AIC)][38] ஆகியவையும் கடுமையான கரிசனைகளை எழுப்பி அறிக்கைகளை வெளியிட்டன. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு (ATA) எதிராக இரு எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளால் குறைந்தபட்சம் இரு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலத்திற்கு எதிராக மனுவொன்றை INFORMஉம் தாக்கல் செய்தது. இந்தச் சட்டமூலம் இன்னும் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படாததால், ATA மீது தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரணைக்கு எடுக்க வேண்டாம் என மீஉயர் நீதிமன்றம் முடிவு செய்தது.*

*தமிழ் ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலையின் 23ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. செயலார்வலரான சந்தியா எக்னெலிகொட காணாமலாக்கப்பட்ட தனது கணவரான ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவுக்கு நீதி கோரி 5,000 நாட்களை கடந்ததை நினைவுகூர்ந்து நினைவுக் கண்காட்சியொன்றை நடத்தினார். 1987இல், இந்திய அமைதிப்படையினரால் (IPKF) ஐம்பதுக்கும் மேற்பட்ட தமிழ் பொதுமக்களைக் கொன்ற கொக்குவில் பிரம்படி படுகொலையின் 36ஆவது ஆண்டு நினைவு தினம் யாழ்ப்பாணத்தில் அனுசரிக்கப்பட்டது. இந்த விடயங்கள் அனைத்தும் இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளன. அரச நிதி பற்றாக்குறையின் காரணத்தினால் முல்லைத்தீவு மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*தம்மைத் தவறான முறையில் கைது செய்து, தடுத்து வைத்தமைக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அலுவலர்களிடமிருந்து இழப்பீடு கோரி கோரிக்கை கடிதம் ஒன்றை ஓய்வுபெற்ற பொலிஸ் அலுவலர் ஷானி அபேசேகர அனுப்பியுள்ளார்.*

*கைது செய்யப்பட்டு, 120 நாட்களுக்கு தடுத்து வைக்கப்பட்டு சட்ட வழக்கொன்றை எதிர்கொண்ட எழுத்தாளர் சக்திகா சத்குமாரவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு அடுத்த வருடம் ஜூன் 7 அன்று வாதங்களுக்காக ஒத்திவைக்கப்பட்டது.*

---

[27] https://www.supremecourt.lk/images/documents/dailycourtlist2022/20.10.2023_2.pdf

[28] INFORM, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அத்துடன் பல நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட செயலார்வலர்கள்

[29] இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (BASL), சட்டத்தரணிகள் கூட்டு மற்றும் பல தனிப்பட்ட சட்டத்தரணிகள்

[30] இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம், இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம், ஊடக சட்ட மன்றம் மற்றும் தனிப்பட்ட ஊடகவியலாளர்கள்

[31] MTV Channel Pvt Ltd

[32] இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் ஏனைய தொழிற்சங்கங்கள்

[33] தேசிய மக்கள் சக்தி, முன்னணி சோஷலிஸ கட்சி, சமகி ஜன பலவேகய, சுதந்திர மக்கள் காங்கிரஸ்

[34] சோஷலிஸ இளைஞர் சங்கம், HRCSLஇன் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன், கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித், ஸ்டார் பப்ளிகேஷன்ஸ் பிறைவேற் லிமிறெற், நாகாநந்த கொடிதுவக்கு மற்றும் பலர்

[35] https://economynext.com/sri-lankas-online-safety-bill-can-be-passed-with-simple-majority-subject-to-31-amendments-138573/

[36] https://www.ifj.org/media-centre/news/detail/category/press-releases/article/sri-lanka-controversial-online-safety-bill-tabled

[37] https://www.icj.org/sri-lanka-proposed-online-safety-bill-would-be-an-assault-on-freedom-of-expression-opinion-and-information/

[38] https://aicasia.org/download/819/

*ஜனாதிபதி மாளிகையில் இருந்து அரசுக்கு எதிரான போராட்டங்களின் போது மீட்கப்பட்ட ரூ.17.85 மில்லியன் கொண்ட தொகைக்கு எதிராக ஆதாரங்கள் இல்லாததின் காரணமாக, மேலதிகச் சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளப் போவதில்லை என கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோருக்கு எதிராக 6.5 மில்லியன் அமெரிக்க டொலர் பொது நிதியைத் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கை, போதிய ஆதாரங்கள் இல்லாத காரணத்தினால், இரத்து செய்யுமாறு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகேவின் சார்த்துரைக்கப்பட்ட இரட்டைக் குடியுரிமையின் காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு அவர் தகுதியற்றவர் எனக் கூறி, குடியுரிமை தொடர்பாக முன்னிலைப்படுத்தப்பட்ட வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றம் பிரிக்கப்பட்ட முடிவொன்றில் தள்ளுபடி செய்தது.*

***நொவம்பர் 2023***

*இரு ஆண்டுகளுக்கு முன்பு தீவிரவாத தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சில விதிமுறைகள் அடிப்படை உரிமைகளை மீறியதால், அவை செல்லுபடியாகாது என மீஉயர் நீதிமன்றம் அறிவித்தது. இந்த விதிமுறைகள் சர்ச்சைக்குரிய PTAஇன் அதிகாரங்களை விரிவுபடுத்தியதுடன், இவை வரலாற்றுரீதியாக மனித உரிமைகள் பாதுகாவலர்களையும், இனச் சிறுபான்மையினரையும் மற்றும் ஏனையோரையும் தன்னிச்சையாகக் கைது செய்வதற்கும் அத்துடன் காவலில் வைப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

*தவறான நிர்வாகத்தின் காரணமாக, நாட்டின் பொருளாதாரத்தை நெருக்கடிநிலைக்கு இட்டுச் சென்றதன் மூலம், முன்னாள் அரசாங்கத்துடன் தொடர்புடைய பல முன்னணி அரசியல்வாதிகளாலும் மற்றும் பல உயர் அரச அலுவலர்களாலும் பொதுமக்களின் நம்பிக்கையும் மற்றும் சட்டத்தின் முன் சமத்துவமும் மீறப்பட்டுள்ளன என்று மீஉயர் நீதிமன்றம் மற்றொரு முக்கிய தீர்ப்பை வழங்கியது.*

*நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலத்தை தற்போதைய வடிவத்தில் நிறைவேற்ற அரசுக்கு சிறப்புப் பெரும்பான்மையொன்று தேவை என்றும், 31 திருத்தங்களுக்கு உட்பட்டு ஓர் எளிய பெரும்பான்மையால் நிறைவேற்றப்படலாம் என்றும் மீஉயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.*

*சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கையின் (ICCPR) சட்டத்தின் பிரிவு 3இன் கீழ், அரசியல் விமர்சகர் முகமது ரம்சி ரசீக் கைது செய்யப்பட்டமையும் அத்துடன் ஏப்ரல் 2020இல் பின்தொடர்ந்த சிறைவாசமும் அவரது அடிப்படை உரிமைகளை மீறுகின்றது என மீஉயர் நீதிமன்றம் முடிவு செய்தது. அரசுக்குச் சொந்தமான தொலைக்காட்சி நிறுவனத்திற்குள் 16 ஆண்டுகளுக்கு முன்பு, முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட குழுவொன்று புகுந்து, அங்கிருந்த ஊழியர்களைத் தாக்கியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றத்தை நீதிமன்றத்தில் தெரிவிக்குமாறு பொலிஸாருக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் இலங்கை அரசியல்வாதிகளுக்கும் மற்றும் இராணுவத்தினருக்கும் தொடர்பு இருப்பதாக இங்கிலாந்தைத் தளமாகக் கொண்ட தொலைக்காட்சி அலைவரிசையான செனல் 4இனால் சார்த்துரைக்கப்பட்ட வலியுறுத்தல்கள் பாதுகாப்பு அமைச்சால் மறுக்கப்பட்டு, கண்டிக்கப்பட்டன. செப்ரெம்பரில், இங்கிலாந்தைச் சேர்ந்த தொலைக்காட்சி அலைவரிசையான செனல் 4 ஓர் ஆவணப்படத்தை ஒளிபரப்பியதுடன், நாட்டில் தேசியப் பாதுகாப்பு நெருக்கடிநிலையை உருவாக்கி, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவை தேர்தலில் வெற்றிபெறுவதற்கு உதவும் சதித்திட்டத்தின் ஒரு பகுதியாக வெடிகுண்டுத் தாக்குதல்களை நடத்திய பயங்கரவாதக் குழு உறுப்பினர்களை ஓர் உயர் புலனாய்வு அதிகாரி சந்தித்தார் என்ற முன்னாள் அரசாங்க உதவியாளர் ஒருவரின் வலியுறுத்தலை அதில் உள்ளடக்கியிருந்தது.*

*பொலிஸ் விசாரணைக்கு அரசியல் தலையீடு இடையூறாக இருப்பதாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணையின் முன்னாள் தலைவர் முதன்முறையாக வலியுறுத்தினார். தாக்குதல்கள் நடந்து ஆறு மாதங்களுக்குப் பின்னர் ராஜபக்ஷ பதவியைக் கைப்பற்றிய போது, வழக்கில் இருந்து தனது குழு நீக்கப்பட்டதாக முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன கூறினார். "புதிய அரசாங்கம் தெரிவு செய்யப்பட்ட பின்னர் உடனேயே" தனது தலைமைப் புலனாய்வாளர் காரணமின்றி பணிநீக்கம் செய்யப்பட்டதாக செனவிரத்ன கூறினார். கடற்படையினரால் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் 11 இளைஞர்களின் பெற்றோர், காணாமல் போன தமது பிள்ளைகளுக்கு நீதி கோரி மீஉயர் நீதிமன்றத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவ்விடயம் தொடர்பில், சட்டமா அதிபர் திணைக்களம் கவனம்*

*செலுத்தத் தவறியதன் காரணமாக, 15 வருடங்களுக்கும் மேலாக நீதி வழங்கப்படுவதில் தடை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஒரு முக்கிய சந்தேக நபருக்கு எதிராக அவர்கள் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையை சட்டமா அதிபர் திணைக்களம் திரும்பப் பெற்றுள்ளது. கொக்குத்தொடுவாய் பாரிய புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணி நொவம்பர் மாத இறுதியில் மேற்கொள்ளப்பட்டதுடன், இரு கட்டங்களிலும் மொத்தம் 40 தனிப்பட்ட மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அடுத்த கட்ட அகழாய்வு 1 மார்ச் 2024 அன்று நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.*

***டிசம்பர் 2023***

*சில செய்திகளை பிங்கிரிய ரூபவாஹினி ஊடகவியலாளர் தினித் குமார சேகரிக்கும் போது, அவரின் ஊடக உபகரணங்களைப் பறிமுதல் செய்து, தாக்கியதாகச் சாரத்துரைக்கப்படும் பிங்கிரிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு எதிராகப் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என வடமேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் உள்ளூர் ஊடக உரிமைகள் குழுவொன்று கடிதம் ஒன்றை கையளித்துள்ளது.*

*பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) கீழ் ஒன்றரை வருடங்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த கவிஞரும் மற்றும் ஆசிரியருமான அஹ்னாப் ஜஸீம், அவருக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.*

*2022இல், மக்கள் போராட்டத்தின் போது அரச எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் குழுவொன்றுக்கு இடையூறு விளைவித்தமைக்காக பொலிஸாரும் மற்றும் இராணுவத்தினரும் வருத்தம் தெரிவித்துள்ளதாக நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.*

*நிகழ்நிலைக் காப்புச் சட்டம் மீதான மனுக்களை விசாரித்த மீஉயர் நீதிமன்றம், நாடாளுமன்றத்தில் ஓர் எளிய பெரும்பான்மையுடன் அதை நிறைவேற்ற 33 திருத்தங்கள் தேவை எனக் கூறியது.*

*குர்ஆனையும் மற்றும் இஸ்லாத்தையும் இழிவுபடுத்தும் வகையொன்றில் பொய்யான அறிக்கைகளை ஊடகங்களுக்கு வழங்கியதாக பொது பல சேன அமைப்பின் செயலாளர் நாயகம் பூஜ்ய கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக எதிர்வரும் மார்ச் 11 அன்று மீண்டும் அழைக்கப்படும் என கோட்டை நீதவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார்.*

*பாடசாலை அதிபரை மண்டியிட்டு துன்புறுத்தியதாக ஊவா மாகாண முதலமைச்சர் ஷாமர சம்பத் தசநாயக்கவிற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு டிசம்பர் 1 அன்று மீளப்பெறப்பட்டது.*

*மார்ச் 9இல் நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாததன் மூலம் பொதுமக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தீர்ப்பளிக்கக் கோரிய மனுக்கள் டிசம்பர் 13 அன்று ஐவர் அடங்கிய மீஉயர் நீதிமன்ற அமர்வு முன் ஒத்திவைக்கப்பட்டது.*

*2010இல், கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை ச்சித்திரவதை செய்தமை, தன்னிச்சையாகக் கைது செய்தமை மற்றும் தடுத்து வைத்தமை ஆகியவற்றுக்கு தற்போதைய பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மற்றும் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் குற்றவாளிகள் என நீதிமன்றம் தீர்ப்பளித்ததுடன், இழப்பீடாக 2 மில்லியன் ரூபாவை வழங்கும்படி அவர்களுக்கு உத்தரவிட்டது. தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மா அதிபராக பதவியேற்பதையும் அத்துடன் பதில் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றுவதையும் தடுக்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி மீஉயர் நீதிமன்றத்தில் பெருமளவு அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம், அவரைப் பதில் பொலிஸ் மா அதிபர் பதவியில் இருந்து நீக்குமாறு ஓர் ஊடக உரிமைகள் குழுவான இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கம் கோரியுள்ளது.*

*பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவிற்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த கொழும்பு மேல் நீதிமன்றம், பாராளுமன்ற உறுப்பினர் வீரவன்சவையும் மற்றும் அவரது உத்தரவாததாரர்களையும் மறுதினம் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்டுள்ளது.*

# *4. ஊடகங்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் மீதான அடக்குமுறை*

***பெப்ரவரி 2023***

*அமைதியான போராட்டக்காரர்கள் மீது அரசுக்கு ஆதரவான கும்பல் தாக்குதல் நடத்தி, அது இறுதியில் ஆளும் கட்சி அரசியல்வாதிகளின் சொத்துக்கள் மீதான தாக்குதல் அலைக்கு வழிவகுத்த நாளான மே 9, 2022 அன்று வன்முறை தொடர்பாக நிகழ்நிலையில் பகிர்ந்த காணொளிக்காக 'யூடியூபரும்' மற்றும் வலைப்பதிவாளருமான தர்ஷன ஹந்துங்கொடவை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கைது செய்தது. .*

*தமிழ் சர்வதேச ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் [International Broadcasting Corporation for Tamil (IBC)] தலைவர் பாஸ்கரன் கந்தையாவுக்கு அறிக்கையொன்றை அளிக்குமாறு உத்தரவிட்டு அழைப்பாணை அறிவித்தலொன்றைப் பயங்கரவாதப் புலனாய்வு திணைக்களம் (TID) அனுப்பியது.*

***மார்ச் 2023***

*சியத டிவி என்ற பெயரில் உள்ளூர் தொலைக்காட்சியொன்றின் மூலம் நடத்தப்படும் தொலைக்காட்சி அரசியல் வர்ணனைப் பிரிவொன்றான சியத தெலிவாகியக்கு எதிராக நாடாளுமன்ற சிறப்புரிமைகளை மீறியதாக சார்த்துரைக்கப்படும் வழக்கை, மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்காக சட்டமா அதிபருக்கு அனுப்பும் தீர்மானமொன்றை நாடாளுமன்றம் நிறைவேற்றியது. இதில் பெரும்பாலும் ஊடக நிறுவனத்திற்கு எதிரான சட்ட நடவடிக்கையும் அடங்கும். ராவண லங்கா என்ற செய்தி இணையத்தளத்தை நடத்தும் இணைய ஊடகவியலாளர் ஜி.பி.நிஸங்க மாயதுன்னவை வரவழைத்த குற்றப் புலனாய்வுத் திணைக்களம், அந்த இணையத்தளத்தில் வெளியான ஆய்வுக் கட்டுரைகள் தொடர்பாக மூன்றரை மணித்தியாலங்களுக்கு மேலாக அவரிடம் விசாரணை நடத்தியதுடன், அவரது ஆதாரங்களை வெளியிடுமாறும் கோரியுள்ளது. பொலன்னறுவை மாவட்டத்தின் மன்னம்பிட்டியவில் உள்ள லங்காதீப பிராந்திய ஊடகவியலாளர் நிமல் ஜயரத்னவிற்கு ஒரு குறிப்பிட்ட சம்பவம் தொடர்பில் தெரிவிக்குமாறு கோரி தொலைபேசி அழைப்பு ஒன்று வந்துள்ளது.*

***ஏப்ரல் 2023***

*இலங்கைப் பொலிஸின் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவுக்கு சுதந்திர ஊடகவியலாளரும் மற்றும் செயலார்வலருமான இராமச்சந்திரன் சனத் வரவழைக்கப்பட்டுள்ளார். அரசுக்குச் சொந்தமான சுயாதீன தொலைக்காட்சி வலைப்பின்னலில் [Independent Television Network (ITN)] பணியாற்றிய பெண் பத்திரிகையாளர் இஷாரா தேவேந்திரா, முகநூல் பதிவொன்றில் பாலியல் துன்புறுத்தல் காரணமாக தனது பதவியை தான் ராஜினாமா செய்ததாகவும் அத்துடன் தான் அளித்த முறைப்பாடுகள் குறித்து நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் வலியுறுத்தியிருந்தார். MV எக்ஸ்-பிரஸ் பேர்ள் கப்பல் வெடிப்பின் காரணமான கடல் பேரழிவு தொடர்பாக தவறான தகவலை வெளியிட்டதாக 'யூரியூபர்' தர்ஷன ஹந்துங்கொட மீது குற்றஞ்சாட்டி சட்டமா அதிபர் திணைக்களம் மனு தாக்கல் செய்ததினால், SLதேசிய 'யூரியூப்' அலைவரிசைக்கும் மற்றும் அவருக்கும் எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இரு தடை உத்தரவுகளை 10 மே 2023 வரை நடைமுறையில் உள்ளவாறு ஏப்ரல் 26 அன்று பிறப்பித்தது.*

*2019இல், உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாக முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டீ லிவேராவுடன் நடத்திய நேர்காணல் தொடர்பில் வாக்குமூலமொன்றைப் பதிவுசெய்வதற்காக Newsfirstஇல் பணிபுரியும் ஊடகவியலாளர் சுல்பிக் ஃபர்ஸான் TIDக்கு வரவழைக்கப்பட்டுள்ளார்.*

***ஜூலை 2023***

*கொழும்பில் நடைபெற்ற தொழிற்சங்கப் போராட்டமொன்றில் செய்தி சேகரித்த வேளை ஊடகவியலாளரும் மற்றும் ஊடக உரிமைச் செயலார்வலருமான தரிந்து உடுவரகெதரவை பொலிஸார் உடல்ரீதியாக தாக்கி கைது செய்தனர். 'யூடியூபரும்' மற்றும் ஊடகவியலாளருமான தர்ஷன ஹந்துங்கொட, அவரது உள்ளடக்கத்தை வெளியிடும் 'யூடியூப்' அலைவரிசையுடனான தொடர்புகளை விசாரிக்க கொழும்பு, நாரஹேன்பிட்டியில் உள்ள நிதிக் குற்றப் பிரிவுக்கு அழைக்கப்பட்டார். இதே 'யூடியூப்' அலைவரிசை தான் பௌத்த மதத்தை அவமதித்ததாக நடாஷா எதிரிசூரியாவின் சர்ச்சைக்குரிய மேடை நகைச்சுவை நடிப்பை வெளியிட்டதாக்க குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. அவருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பாக அவரது இலத்திரனியல் உபகரணங்களைக் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்குமாறு நீதவான் நீதிமன்றம் அவருக்கு உத்தரவிட்டுள்ளது. மே 2021இல், இலங்கையின் கடற்பரப்பில் மூழ்கிய எக்ஸ்-பிரஸ் பேர்ள் கப்பலுக்குச் சொந்தமான நிறுவனத்திற்கு எதிராக சட்டப்பூர்வ வழக்கொன்றைத் தாக்கல் செய்வதில் AG திணைக்களத்தின் ஒரு சில அலுவலர்கள் தாமதம்*

செய்ததாகக் குற்றஞ்சாட்டி அவர் வெளியிட்ட காணொளி தொடர்பாக அவர் விசாரிக்கப்பட்டார்.[39] மற்றொரு சம்பவம் தொடர்பாக அதே 'யூடியூபருக்கு' எதிராக அவதூறு செய்ததாக கொழும்பு மாநகர சபையின் கொழும்பு மேயர் முறைப்பாடு செய்தார். 'லங்காதீப' பத்திரிகையின் பிராந்திய ஊடகவியலாளர் ஒருவர் அவரது அலுவலகத்தில் வைத்து இனந்தெரியாத இருவரால் தாக்கப்பட்டுள்ளார். தாக்குதலுக்கு சில நாட்களுக்கு முன்பு, அடையாளம் தெரியாத நபர் ஒருவர் அவரது அலுவலகத்திற்குள் பிரவேசித்தார். இது குறித்து அவர் பொலிஸில் முறைப்பாடு செய்தார். முறைப்பாட்டின் பேரில் பொலிஸார் விசாரணைக்கு வந்த போது, ஒரு மக்கள் கூட்டம் அங்கு வந்து நிகழ்வினைக் காணொளி பதிவு செய்துள்ளது. அவர்களின் அடையாளம் குறித்து ஊடகவியலாளர் வினவிய போது, ஊடகவியலாளரை அவர்கள் தாக்கியுள்ளனர்.[40]



தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஊடக உரிமைகள் செயலார்வலரும் மற்றும் ஊடகவியலாளருமான தரிந்து உடுவரகெதர ஈடுபட்டிருந்த போது, பொலிஸாரால் தாக்கப்பட்டு, கைது செய்யப்பட்டார். 28 ஜூலை 2023, கொழும்பு. புகைப்பட உபயம்: the leader

***ஓகஸ்ட் 2023***

*CID தலைவர் ஷானி அபேசேகரவிற்கு எதிரான வழக்கின் போது, அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஊடக அடையாள அட்டைகளைக் காண்பிக்கத் தவறிய அத்துடன்/அல்லது இணைய தளங்களில் பணிபுரிந்த ஊடகவியலாளர்களை நீதிமன்ற வளாகத்திற்குள் பிரவேசிப்பதை கம்பஹா நீதிமன்ற வளாகத்தில் கடமையாற்றிய போது பொலிஸ் அலுவலர் ஒருவர் தடுக்க முயன்றார். ஜனாதிபதியின் இணையதளத்தை அணுகுவதில் இருந்து தாம் தடுக்கப்பட்டுள்ளதாக ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய இடுகை செய்துள்ளார். ஏனையோரைக் கொண்ட குழுவொன்றுடன் சேர்த்து மூன்று ஊடகவியலாளர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதுடன், ஒரு புத்த பிக்கு தலைமையிலான கும்பலொன்றினால் புகைப்படங்களை நீக்குமாறு நிர்பந்திக்கப்பட்டனர். அரசாங்கத்திற்கு எதிராக அரசியல் சதியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 'சிரச' தொலைக்காட்சிக்கு எதிராக பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமிக்க ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.*

***செப்ரெம்பர் 2023***

*கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் அகழ்வாராய்ச்சியின் மூன்றாவது நாளன்று, அந்த இடத்தில் நேர்காணல்களை நடத்திக்கொண்டிருந்த இரு ஊடகவியலாளர்களைப் பொலிஸார் தடுத்து அப்புறப்படுத்தினர். பொதுமக்கள் உடையில் பல புலனாய்வுப் பணியாளர்களை அமைவிடத்தில்*

[39] https://www.youtube.com/watch?v=VgtVo8umlac
[40] குளியாபிட்டிய பிரதேச ஊடகவியலாளர் தாக்கப்பட்டுள்ளார்

*புகைப்படம் எடுக்க அனுமதித்த போதிலும், அகழ்வாராய்ச்சி நடந்த இடத்திற்கு வெளியே இருக்கும்படி அனைத்து பத்திரிகையாளர்களுக்கும் அவர்கள் கட்டளையிட்டனர்.*

***ஒக்ரோபர் 2023***

*இரணைதீவிற்குள் பிரவேசிக்க ஒரு சர்வதேச புகைப்பட ஊடகவியலாளருக்கு இலங்கை இராணுவம் அனுமதி மறுத்துள்ளது. அரசாங்க அமைச்சர் ஒருவர் செய்த முறைப்பாடு தொடர்பில் 'நெத் எப்.எம்' செய்திப் பிரிவின் தலைவர் உட்பட நான்கு ஊடகவியலாளர்கள் பாராளுமன்ற சிறப்புரிமைக் குழுவினால் வரவழைக்கப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். ஜனாதிபதியை விமர்சித்து எதிர்க்கட்சித் தலைவர் வெளியிட்ட அறிக்கையை மேற்கோள் காட்டியதற்காக அதன் தினசரி பத்திரிகை ஒன்றின் ஆசிரியருக்கு எதிராக அரசுக்குச் சொந்தமான அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒஃப் சிலோன் லிமிற்றெற் [Associated Newspapers of Ceylon Limited (ANCL)] பத்திரிகையின் நிர்வாகம் ஒழுக்காற்று விசாரணையொன்றை ஆரம்பித்தது. மாட்டுப் பண்ணையாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போராட்டத்தைக் கலைக்கும் போது, இடம்பெற்ற பொலிஸ் வன்முறைகள் தொடர்பாக செய்தி வெளியிட்ட மட்டக்களப்பில் உள்ள இரு தமிழ் ஊடகவியலாளர்களிடம் பொலிஸாரால் 2 மணித்தியாலங்களுக்கு மேல் விசாரணை நடத்தப்பட்டது.*

***நொவம்பர் 2023***

*2020இல், மாவீரர் தினம் குறித்து வெளியான கட்டுரை தொடர்பில், யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகையின் ஆசிரியர் குழு உறுப்பினரும் மற்றும் ஊடகவியலாளருமான திலீபன் அமுதனுக்கு பயங்கரவாதப் புலனாய்வுத் திணைக்களம் அழைப்பு விடுத்துள்ளது. அரசால் நடத்தப்படும் ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் பணிபுரியும் குருநாகலைத் தளமாகக் கொண்ட மாகாண ஊடகவியலாளர் தினேத் குமார, பிங்கிரிய பொலிஸ் நிலைய அலுவலர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார். உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் குழு ஒன்று சோதனைச் சாவடியில் இரு மணி நேரத்திற்கும் மேலாக நிறுத்தப்பட்டு, அரசாங்கத் தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகள், அவர்களின் வீட்டு முகவரிகள் மற்றும் அவர்களின் பணியிட முகவரிகள் ஆகியன உட்பட அவர்களின் விவரங்களைப் பதிவு செய்தது.*

***டிசம்பர் 2023***

*மகேஷ் குணசிங்க என்ற பெயருடைய 36 வயதுடைய ஊடக ஒளிப்பதிவாளர் வெயங்கொடையின் கட்டுவகஸ்கொட பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளார். மே 2022இல், தமிழினப் படுகொலை நினைவு தினத்தின் போது, வளாகத்தில் நடைபெற்ற நினைவேந்தல் வைபவமொன்றின் போது இசைக்கப்பட்ட பாடல்களின் தேர்வு குறித்து, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவரும் மற்றும் ஊடகவியலாளருமான ராசரத்தினம் தர்ஷனிடம் இலங்கைப் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் 3 மணித்தியாலங்களுக்கு மேலாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். IBCஇன் மட்டக்களப்பு செய்தியாளரான தமிழ் ஊடகவியலாளர் லெட்சுமணன் தேவபிரதீபன், வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டுள்ளார். கிழக்கு மாகாணத்தில் உள்ள மயானத்தில் நடைபெற்ற தமிழ்ப் தியாகிகள் நினைவேந்தல் குறித்து அவர் அறிககையிட்டுள்ளதாகக் கூறப்பட்டது. பொலிஸ் நிலையத்திற்கு வருவதற்கு தேவபிரதீபன் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளின் பதிவுச் சான்றிதழைக் கொண்டு வருமாறு அவரிடம் கேட்கப்பட்டதுடன், கடந்த நொவம்பர் 27 அன்று மட்டக்களப்பு தாராவியில் உள்ள மயானத்தில் நடைபெற்ற தமிழ்த் தியாகிகள் நினைவேந்தல் குறித்து அவர் விசாரிக்கப்பட்டார்.*

# 5. ஒன்று கூடும் சுதந்திரத்தின் அடக்குமுறை

***ஜனவரி 2023***

*ஜனவரி 16 அன்று, கொழும்பு காலிமுகத் திடலில் போராட்டக்காரர்கள் பிரவேசிப்பதைத் தடுக்கும் வகையில், பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனம் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியொன்று தொடர்பில் பொலிஸாரால் கண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டமை குறித்து கொழும்பு கோட்டை நீதவான் தடை உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளார். பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் சம்மேளனம் (IUSF) அதன் தலைவர் வசந்த முதலிகேயை விடுதலை செய்யுமாறும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (PTA) நீக்குமாறும், மின்சாரம், எரிவாயு மற்றும் எரிபொருள் ஆகியவற்றின் விலைகளைக் குறைக்கமாறும் கோரி போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது..[41] ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 15 ஜனவரி 2023 அன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து, நல்லூரில் உள்ள சிவன் கோவிலில் பொங்கல் விழாக்களில் பங்கேற்றார். இதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களும் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலிருந்து நல்லூருக்கு கண்டன ஊர்வலமொன்றை நடத்தியதுடன், அங்கும் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. அதே போராட்டத்தில், பிரபல சிவில் சமூகத் தலைவர் வேலன் சுவாமிகள் போராட்டத்தின் போது 'பொலிஸாரின் பணியைத் தடுத்ததாக' ஜனவரி 18 அன்று கைது செய்யப்பட்டார். ரூ. 200,000 ($550) கொண்ட அரசாங்கத்தின் இழப்பீட்டுத் தொகையை நிராகரித்து, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியையும், மற்றும் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையையும் கோரி, 30 ஜனவரி 2023 அன்று அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அமைப்பின் தலைவி தம்பிராசா செல்வராணி தலைமையில் போராட்டமொன்று நடந்தது. பொத்துவில் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அவருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டது..[42] [43] [44] நொவம்பர் 2022இல், முள்ளியவளை துயிலும் இல்ல மயானத்தில் மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வை ஏற்பாடு செய்த ஆறு தமிழர்களை முள்ளியவளை பொலிஸார் வரவழைத்து, அவர்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்தனர். மயானத்தின் நுழைவாயிலில் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான படங்கள் இருந்ததாகக் கூறப்படும் வளைவு வடிவ அலங்காரம் குறித்து அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது..[45]*

***பெப்ரவரி 2023***

*அரசாங்க சுதந்திர தின விழாவைக் கண்டித்து நடத்தப்பட்ட மௌன போராட்டத்தைப் பொலிஸார் தண்ணீர் பீய்ச்சி அடித்தும், போராட்டத்தில் ஈடுபட்ட பலரையும் கைது செய்தும் கலைத்தனர். இனந்தெரியாத குழுவொன்று வந்து பதற்றமான சூழ்நிலையை ஏற்படுத்தியதுடன்,, பின்னர் அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் செய்தனர் என பின்னர் விசாரணையொன்றை நடத்திய மனித உரிமைகள் ஆணைக்குழு தெளிவுபடுத்தியது..[46] சுதந்திர தினக் கொண்டாட்டத்திற்கு எதிரான மற்றொரு போராட்டம் யாழ்ப்பாணம் நகரின் ஊடாக நகரும் போது, அதை நிறுத்துவதற்கு பொலிஸார் பெருமளவு முயற்சிகளை மேற்கொண்டனர். எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளான தேசிய மக்கள் சக்தி (NPP) மற்றும் சமகி ஜன பலவேகய (SJB) ஆகியவை முக்கியமாக தேர்தலை ஒத்திவைக்கக் கூடாது என்று கோரி ஏற்பாடு செய்திருந்த வேறு இரு போராட்டங்கள், பொலிஸாரினால் கண்ணீர்ப்புகை மற்றும் தண்ணீர்ப் பீரங்கிகள் ஆகியவற்றினால் தாக்கப்பட்டன. NPP போராட்டத்தின் போது, 28 பேர் காயமடைந்தனர் மற்றும் ஒருவர் இறந்தார். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றிற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருகை தந்தமைக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் (TNPF) பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் அவர்களின் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷ் உள்ளிட்ட 17 ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 2022 டிசம்பரில் இருந்து மூடப்பட்ட பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் பணியை மீண்டும் தொடங்கக் கோரி பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான பிக்கு கூட்டமைப்பு (IUBF) ஏற்பாடு செய்திருந்த போராட்டம் கண்ணீர் புகை மற்றும் நீர் பீரங்கிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி கலைக்கப்பட்டது. இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு எதிராக தேசியவாத பிக்குகள் குழுவினால் முன்னெடுக்கப்பட்ட வித்தியாசமான ஆர்ப்பாட்டம் பொலிஸாரால் தடுக்கப்பட்டது. அரசாங்கத்தின் வரிக் கொள்கையை மீளாய்வு செய்யக் கோரி வங்கி, சுகாதாரம், துறைமுகங்கள், மின்சாரம் மற்றும் எரிசக்தி ஆகிய துறைகளின் ஊழியர்கள் நடத்திய போராட்டத்திற்கு எதிராக நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

---

[41] https://www.newsfirst.lk/2023/01/16/iusf-protest-tear-gassed-twice-in-colombo/

[42] https://english.theleader.lk/news/3547-ampara-activist-summoned-before-courts

[43] https://twitter.com/JDSLanka/status/1620103216825536514

[44] https://twitter.com/JDSLanka/status/1620005080056631297

[45] https://www.tamilguardian.com/content/sri-lankan-police-summon-maaveerar-naal-organisers-mulliyawalai

[46] https://www.newsfirst.lk/2023/02/05/hrcsl-probes-attack-on-peaceful-protestors-in-maradana-on-eve-of-independence-day/

***மார்ச் 2023***

*கடந்த ஆண்டு ஊரடங்குச் சட்டத்தை மீறியமை மற்றும் சட்டவிரோதமான ஒன்றுகூடுதலில் ஈடுபட்டமை ஆகிய குற்றச்சாட்டின் பேரில், கண்டி #GotaGoGama ஆக்கிரமிக்கப்பட்ட போராட்ட தளத்தில் செயலார்வலரான தனஞ்சய ரத்நாயக்கவை பொலிஸார் கைது செய்தனர். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதா, தனது 6 வருடப் போராட்டத்திற்கு அடித்தளமாகப் பயன்படுத்திய கொட்டகைக்கு சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். கடந்த வாரத்தில் போராட்டக்காரர்களுக்கு எதிராக காலாவதியான கண்ணீர்ப் புகைக்குண்டுளையும் மற்றும் அசுத்தமான தண்ணீரையும் பொலிஸார் பயன்படுத்தியதாகவும், அதன் விளைவாக மூன்று இறப்புகளும் மற்றும் வேறு உடல்நல சிக்கல்களும் ஏற்பட்டுள்ளதாகவும் தமக்கு நம்பகமான தகவல் கிடைத்துள்ளதாக எதிர்கட்சி அரசியல் கட்சியான தேசிய மக்கள் சக்தியை (NPP) பிரதிநிதித்துவப்படுத்தும் வழக்கறிஞர்கள் சார்த்துரைத்தனர். RTI கோரிக்கையொன்றைச் சமர்ப்பித்து, கண்ணீர் புகைக்குண்டுகள் பற்றிய விரிவான அறிக்கையை அவர்கள் கோரினர். கொழும்பில் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனம் (IUSF) ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டப் பேரணியை தடுக்கும் வகையில் கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. அவர்களின் போராட்டம் கொழும்பு பல்கலைக்கழகத்தை கடந்து சென்ற போது, பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை ஆகியவறைக் கொண்டு தாக்குதல் நடத்தினர். பல்கலைக்கழக வளாகத்தினுள் பொலிஸார் பலவந்தமாகப் பிரவேசித்து, கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி, நூற்கல்விச் சூழலைச் சீர்குலைத்துள்ளனர். பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய பிரியந்த வன்னிநாயக்க என்ற பாதுகாப்பு உத்தியோகத்தர் கண்ணீர் புகைக்குண்டு தாக்கியதில் உயிரிழந்துள்ளார். மார்ச் 7 அன்று, பல்கலைக்கழக மாணவர்கள் கொழும்பில் நடத்திய போராட்டத்தைக் கலைப்பதற்காக நிறுத்தப்பட்டிருந்த இராணுவத்தினரால் இரும்பு வளையங்களுடன் கூடிய மரக்கட்டைகள் எடுத்துச் செல்லப்பட்டதை அவதானிக்க முடிந்தது. இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், போராட்டத்தைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை இராணுவத்தின் தலையீடு இல்லை எனவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். பல்கலைக்கழக வளாகத்திற்குள் வலுக்கட்டாயமாகப் பிரவேசித்த பொலிஸாருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு நூற்கல்விமான்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ள நிலையில், பொலிஸார் தமது நடவடிக்கைகளை நியாயப்படுத்தியுள்ளனர். பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து மறுதினம் மற்றுமொரு போராட்டத்தை ஏற்பாடு செய்த கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் மீதும் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி, பொலிஸாரால் அவர்கள் கலைக்கப்பட்டனர். பல்கலைக்கழக வளாகத்திற்கு அருகில் போராட்டத்தை ஏற்பாடு செய்த களனி பல்கலைக்கழக மாணவர்கள் மீது கண்ணீர்ப்புகையும் மற்றும் தண்ணீரும் ஏவப்பட்டு அவர்கள் கலைக்கப்பட்டதுடன், ஒன்பது போராட்டக்காரர்களும் கைது செய்யப்பட்டனர். மார்ச் 31 அன்று, கொழும்பின் புறநகர்ப் பகுதியான நுகேகொட மிரிஹான பகுதியில் உள்ள ஜூபிலி கம்பத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கக் கோரி அழைக்கும் போராட்டமொன்றுடன் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த அரகலயவின் (மக்கள் போராட்டம் 2022) முதலாம் ஆண்டு நிறைவு விழாவுக்கு பொலிஸார் இடையூறு செய்தனர். அண்ணளவாக அதே நேரத்தில், படிப்படியாக புத்துயிர் பெறும் பொருளாதாரத்தைச் சீர்குலைக்க போராட்டக்காரர்கள் முயற்சிப்பதால், விரைவில் போராட்டக்காரர்களை மக்கள் தாக்குவார்கள் என்று சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்தார்.*

***ஏப்ரல் 2023***

*ஏப்ரல் 9 அன்று, காலிமுகத் திடலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சர்வமத இப்தார் நிகழ்வில் கலந்துகொள்ள முஸ்லிம் அல்லாதவர்களைத் தடுக்க பொலிஸார் முயற்சித்துள்ளனர். காலிமுகத் திடலில் நினைவுகூர அனுமதிக்கப்படாத அரகலயாவின் வருடாந்த நினைவேந்தலுடன் இணைந்த நாள் என்பதனால் அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. அப்பகுதியில் உள்ள விவசாய நிலத்தில் பௌத்த சிலைகளை நிறுவுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளை பௌத்த பிக்கு ஒருவரின் மெய்ப்பாதுகாவலொருவர் அச்சுறுத்தியுள்ளார். அதன் முன்மொழியப்பட்ட தனியார்மயமாக்கலுக்கு எதிராக, அரை-அரசு தொலைத்தொடர்பு நிறுவனத்தின் தொலைத்தொடர்பு தொழிற்சங்கங்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போராட்டமொன்று பொலிஸாரால் சீர்குலைக்கப்பட்டது. மாணவ செயலார்வலர்களை விடுவிக்கக் கோரி, கொழும்பில் உள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அலுவலகத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட மாணவர் போராட்டத்தின் மீது கண்ணீர்ப்புகை மற்றும் தண்ணீர் ஆகியவற்றுடன் பொலிஸார் தாக்குதல் நடத்தியுள்ளனர். சம்பவம் குறித்து விசாரணையொன்றை தாம் ஆரம்பித்துள்ளதாகவும் அத்துடன் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு பொலிஸ் மா அதிபரிடம் கேட்டுள்ளதாகவும் HRCSL தெரிவித்தது.*

*மே 2023*
*2022 மக்கள் போராட்டத்தின் போது, கொழும்பு காலிமுகத் திடலில் அமைதியான அரச எதிர்ப்புப் போராட்டக்காரர்கள் மீது 9 மே 2022 அன்று நடத்தப்பட்ட தாக்குதலின் முதலாம் ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வுக்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. கடந்த ஆண்டில் தான் எதிர்கொண்ட தாக்குதலுக்கு நீதி கேட்டும், கைது செய்யக் கோரியும் பேரணி நடத்திய மே 9 தாக்குதலில் பாதிக்கப்பட்ட அரகலயவைச் சேர்ந்த முஸ்லிம் பெண் எதிர்ப்பாளரான மொரின் நூரை பொலிஸார் கைது செய்தனர். கொழும்பில் இடம்பெற்றுவரும் இலங்கையின் இறுதிக் கட்ட உள்நாட்டுப் போரில் உயிரிழந்தவர்களைக் கௌரவிக்கும் நினைவேந்தல் நிகழ்வுக்கு பௌத்த பிக்குகள் தலைமையிலான அதிதீவிர தேசியவாத சிங்கள பௌத்த குழுவினர் இடையூறு விளைவித்தனர். மே 16 அன்று, கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போராட்டத்திற்கும், மே 18 அன்று களனிப் பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போராட்டத்திற்கும், மே 23 அன்று பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போராட்டத்திற்கும் கண்ணீர் புகைக் குண்டுகளையும் மற்றும் தண்ணீரையும் ஏவி, பொலிஸார் இடையூறு செய்தனர். மே 11 அன்று, கொழும்பு பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருந்த மாணவர் கூட்டமொன்று பற்றிய புலனாய்வுத் தகவல் கிடைத்ததால், அந்த வளாகத்தைச் சுற்றி பொலிஸாரும் மற்றும் இராணுவத்தினரும் நிறுத்தப்பட்டனர்.*

*ஜூன் 2023*
*ஜூன் 4 அன்று கொழும்பில் நடைபெற்ற சுதந்திரப் பெருமை அணிவகுப்பு (Freedom Pride Parade) ஏற்பாட்டாளர்களை விசாரிக்கும் ஆரம்பத் திட்டத்தை அரசாங்கம் கைவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஜூன் 18 அன்று நடத்தப்பட்ட மற்றொரு பெருமை நடைப்பயணத்தை ஒரு சிரேஷ்ட பொலிஸ் அலுவலரும் மற்றும் ஓர் அரசியல்வாதியும் தடுக்க முயன்றதாக்க கூறப்படுகிறது. இந்தச் சவால்களுக்கு மத்தியில், பிங்க் வொஷிங் மற்றும் சில பெருமை நிகழ்வுகள் ஆகியவற்றில் இருந்து அரசாங்க எதிர்ப்பு உணர்வுகளை ஒதுக்கி வைக்கும் முயற்சிகளின் வளர்ந்து வரும் போக்குகள் காணப்பட்டன. தேசிய மக்கள் சக்தி (NPP) உறுப்பினர்கள் ஏற்பாடு செய்திருந்த தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் முன்பாக போராட்டம் நடத்துவதை தடுக்கும் வகையில் நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஜூன் 7 அன்று, கொழும்பு புறநகர்ப் பகுதியான நுகேகொடை நகரை கடந்து செல்லும் போது, பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்ட எதிர்ப்பாளர்கள் மீது பொலிஸார் கண்ணீர் புகையையும் மற்றும் தண்ணீரையும் ஏவினர். பொலிஸ் உத்தியோகத்தர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக சிவில் உடை அணிந்திருந்த அரச புலனாய்வுப் பிரிவினரிடம் விசாரணை நடத்திய போது, அவர்களைத் தடுத்ததாகக் கூறி, நாடாளுமன்ற உறுப்பினரும் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் (TNPF) தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சில நாட்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டார். பாராளுமன்ற நடவடிக்கைகளில் பங்கு கொள்ள வந்த அவர் கொழும்பில் கைது செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்வதற்காக யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லப்பட்டார். இரு வெவ்வேறு நிகழ்வுகளில், அதே சம்பவம் தொடர்பாக மூன்று பெண்கள் உட்பட மொத்தம் நான்கு TNPF உறுப்பினர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.*

*ஜூலை 2023*
*1983 கறுப்பு ஜூலை தமிழர் எதிர்ப்பு படுகொலையை நினைவுகூரும் ஒரு மௌனப் போராட்டம் சிங்கள தேசியவாதிகளாலும் மற்றும் பொலிஸாராலும் சீர்குலைக்கப்பட்டது. அதே வேளை, கறுப்பு ஜூலையை நினைவுகூர்ந்து கொழும்பில் நடத்தப்பட்ட மற்றொரு ஆர்ப்பாட்டப் பேரணியும் பொலிஸாரால் போராட்டக்காரர்கள் கண்ணீர்ப்புகை மற்றும் தண்ணீர் ஆகியவற்றுடன் தாக்கப்பட்டு, ஆர்ப்பாட்டம் கலைக்கப்பட்டது. கூட்டுத் தொழிற்சங்கக் கூட்டமைப்பொன்றினால் உத்தேச தொழிலாளர் சட்டச் சீர்திருத்தங்களுக்கும் மற்றும் கடன் மறுசீரமைப்புத் திட்டத்திற்கும் எதிராக ஓய்வூதிய நிதியைப் பயன்படுத்தி ஏற்பாடு செய்யப்பட்டு, கொழும்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் கண்ணீர்ப்புகை மற்றும் தண்ணீர் ஆகியவற்றுடன் தாக்கப்பட்டு, பொலிசாரால் கலைக்கப்பட்டது. மேலே குறிப்பிட்டது உட்பட மூன்று தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு எதிராக நீதிமன்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. மே 2022இல் அரசாங்க அரகலயா எதிர்ப்பு தளம் மீது அரசு சார்பு கும்பல் தாக்குதல் நடத்திய போது, தான் எதிர்கொண்ட தாக்குதல்களின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை நினைவுகூரும் வகையில் ஒரு நபர் போராட்டம் நடத்தியதற்காக மே மாதம் பொலிசாரால் கைது செய்யப்பட்டதாக மொரின் நூர் தாக்கல் செய்த அடிப்படை மனுவைத் தொடர மீஉயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியது. இந்த மீஉயர் நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து, பெருமளவு மணித்தியாலங்கள் கழித்து, விவரங்களைக் குறிப்பிடாத விசாரணையொன்று தொடர்பாக இலங்கை பொலிஸின் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் இணையவெளிக் குற்றப்பிரிவு, ஜூலை 25 அன்று தமது அலுவலகத்தில் ஆஜராகுமாறு அவருக்கு அழைப்பாணையொன்றைக் கையளித்தது.*

**ஓகஸ்ட் 2023**

*முக்கியமாக உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்கும் மற்றும் வேறு பிரச்சினைகளுக்கும் எதிராக கொழும்பில் நடைபெற்ற போராட்டங்களுக்கு எதிரான உத்தரவுகளை நான்கு நீதிமன்றங்கள் பிறப்பித்தன. ஓகஸ்ட் 10 அன்று, பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனம் (IUSF) ஏற்பாடு செய்திருந்த போராட்டத்திற்கு எதிராக இரு நீதிமன்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. கண்ணீர் புகையுடனும் மற்றும் தண்ணீருடனும் தாக்கியும் அத்துடன் 22 பேரை கைது செய்தும் போராட்டத்தைப் பொலிஸார் கலைத்தனர். அடுத்த தினம், பல சட்டமியற்றுபவர்கள் ஏற்பாடு செய்திருந்த போராட்டத்திற்கு எதிராக மற்றொரு நீதிமன்றத் தடையுத்தரவு பெறப்பட்டது. தொழிற்சங்கச் செயலார்வலர் குழுவொன்றினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டப் பேரணிக்கு எதிராக மற்றுமொரு நீதிமன்ற தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சில சமயங்களில் வீதியோரங்களில் ஆர்ப்பாட்டம் நடத்த பொலிஸார் அனுமதித்த போதிலும், போராட்டக்காரர்களை ஊர்வலமாகச் செல்வதை அவர்கள் தடுத்தனர். சர்ச்சைக்குரிய குருந்தூர் மலை தொல்பொருளியல் அமைவிடத்தில் இந்து சமய வழிபாட்டுச் சடங்கைத் தடை செய்யும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு பொலிஸாரின் கோரிக்கையை நீதவான் நிராகரித்ததினால், சிங்கள தேசியவாதிகளைக் கொண்ட குழுவொன்று நிகழ்வைச் சீர்குலைக்க முயற்சித்துள்ளது.*

**செப்ரெம்பர் 2023**

*1987 செப்ரெம்பரில் உண்ணாவிரதப் போராட்டத்தின் போது உயிரிழந்த தமிழ் கிளர்ச்சித் தலைவர் திலீபனின் 32ஆவது நினைவு தினத்தை நினைவுகூரும் நினைவேந்தல் பவனியை சிங்களத் தேசியவாதக் கும்பல் ஒன்று தாக்கியது. தாக்குதல் தொடர்பாக ஆறு பேரைப் பொலிஸார் கைது செய்தனர். வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய மாகாணங்களில் பயணிக்கும் நினைவேந்தல் பவனிக்கு எதிராக பொலிஸார் கோரிய பெருமளவு தடை உத்தரவுகளை நீதிமன்றம் நிராகரித்துள்ளது. நினைவேந்தல் பவனியை நோக்கி வெறுப்புணர்வைத் தூண்டும் சுவரொட்டிகள் மன்னாரில் காணப்பட்டன. திலீபன் நினைவேந்தல் நிகழ்வை கொழும்பில் கிறிஸ்தவ ஒற்றுமை இயக்கம் ஏற்பாடு செய்ய முயற்சித்த அதேவேளை, கொழும்பில் திலீபன் நினைவேந்தல்களை நடத்துவதற்கு இரு நீதிமன்றங்களால் இரு தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களை தாக்குவோம் என மிரட்டும் வகையில் சமூக வலைதளப் பதிவுகள் அனுப்பப்பட்டு, பகிரப்பட்டன. பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போராட்டத்தைப் பொலிஸார் கலைத்து, போராட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர். கிழக்கு மாகாணத்தில் அரச அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்புக்கு எதிராக வாதிட்ட தமிழ் செயலார்வலர் பால்ராஜ் ராஜ்குமார், திருகோணமலை பொலிஸின் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கு வரவழைக்கப்பட்டு நீண்ட நேர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.*

**ஒக்ரோபர் 2023**

*முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி டி.சவரணராஜாவுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோரி வட மாகாணத்தில் சட்டத்தரணிகள் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டத்தை பொலிஸ் அலுவலர்கள் புகைப்படம் எடுத்தனர். கால்நடை வளர்ப்போரினாலான போராட்டமொன்றைப் பொலிஸார் அவர்களை உடல்ரீதியாகத் தாக்கி கலைத்தனர். மட்டக்களப்பில் தமது பாரம்பரியமிக்க மேய்ச்சல் நிலங்களைப் பிறர் அத்துமீறி அபகரித்தமைக்கு எதிராக தொடர்ச்சியாக 24 நாட்களாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பாற்பண்ணையாளர்கள் குழுவிற்கு எதிராக தடை உத்தரவுவொன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. திருகோணமலைப் பிரதேசத்தில் புதிய பௌத்த விகாரை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 8 பேருக்கு எதிராக திருகோணமலை நீதவான் நீதிமன்றம் தடை உத்தரவுவொன்றைப் பிறப்பித்துள்ளது. கூட்டுப்பொறுப்புணர்வுடன் ஒன்று சேர்ந்து போராட்டத்தில் ஈடுபடத் திட்டமிட்டிருந்த அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் குடும்பங்களை மட்டக்களப்பில் தடுத்து நிறுத்தி, அண்ணளவாக 3 மணி நேரம் விசாரணை நடத்தி, அவர்களைப் போராட்டத்தில் கலந்துகொள்ள விடாமல் தடுத்துள்ளனர். பெருமளவு ஆசிரியர் தொழிற்சங்கங்கள் இணைந்து கொழும்பில் நடத்திய போராட்டம் மற்றும் கண்டியிலும் மற்றும் கொழும்பிலும் பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரு போராட்டங்கள் ஆகியன மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை ஏவினர்.*

**நொவம்பர் 2023**

*மைலத்தமடு கால்நடை வளர்ப்போர் போராட்டத்திற்கு ஆதரவளித்த ஆறு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தை முடித்துவிட்டு மீண்டும் யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த போது, சந்திவெளிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். சப்ரகமுவ பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போராட்டத்தை தடுத்து நிறுத்திய பொலிஸார், அவர்களில் 21 பேரை கைது செய்துள்ளனர். மின்சாரக் கட்டண உயர்வைக் கண்டித்து கம்பஹா ஹொரகஸ்முல்லவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தைப் பொலிஸார் கலைத்ததோடு, அதனைத் தொடர்ந்து ஆறு*

*ஆர்ப்பாட்டக்காரர்களைக் கைது செய்தனர். அதிகரிக்கப்பட்டுள்ள மின் கட்டணத்திற்கு எதிராக ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டமொன்று ஜனாதிபதி செயலகத்தையும், ஜனாதிபதி மாளிகையையும் மற்றும் நிதியமைச்சின் வளாகத்தையும் நெருங்குவதைத் தடுக்கும் வகையில், கொழும்பு கோட்டை நீதவான் உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளார். மாவீரர் தினம் நினைவேந்தலுக்கு பொலிஸார் இடையூறு விளைவித்த பெருமளவு சம்பவங்கள் கிழக்கு மாகாணத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளன. ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, அரசால் முன்னர் அழிக்கப்பட்ட புலிகளின் கல்லறையில் உடைந்த மூலக்கற்கள் இனந்தெரியாத நபர்களால் சிறிய துண்டுகளாக உடைக்கப்பட்டன. இது நினைவுக் கொண்டாட்டத்திற்காக உள்ளூர் இளைஞர்கள் உடைந்த பாகங்களை மீள்-ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த போது நிகழ்ந்தது. உள்நாட்டுப் போரின் போது உயிரிழந்த தமிழர்கள் அடக்கம் செய்யப்பட்ட மயானத்தில் நடைபெற்ற மாவீரர் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொள்ளவிருந்த தமிழ்ப் பொதுமக்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். மற்றுமொரு சம்பவத்தில், மட்டக்களப்பு மாவீரர் தின நினைவேந்தலின் அலங்காரத்தைப் பொலிஸார் பலவந்தமாகப் பிரவேசித்து அகற்றியுள்ளனர். வாழைச்சேனைப் பொலிஸார் நொவம்பர் 27 அன்று மாவீரர் தினத்தின் நினைவாக அமைக்கப்பட்டிருந்த நினைவுத்தூபியை இடித்து, தரைமட்டமாக்கியுள்ளனர். நீதிமன்ற உத்தரவுக்கமைய, அதனை அழித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். மூதூரில் மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக சென்ற தனிப்பட்ட தமிழர்களைக் கொண்ட குழுவொன்றை சம்பூர் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் வைத்து சம்பூர் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். பிரதேசவாசிகள் 6 பேரை வாழைச்சேனைப் பொலிஸார் கைது செய்ததுடன், நிகழ்வுக்கு பயன்படுத்தப்பட்ட அவர்களின் ஒலிபெருக்கிகளையும் மற்றும் மின்பிறப்பாக்கியையும் பறிமுதல் செய்தனர்.*

***டிசம்பர் 2023***

*நாடாளுமன்றம் அருகே நடைபெற்ற போராட்டத்தைப் பொலிஸார் போராட்டக்காரர்கள் மீது கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும், தண்ணீர் பீச்சியடித்தும் கலைத்தனர். இது தேசிய மக்கள் சக்தியின் (NPP) மகளிர் பிரிவினால் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுக்கும், அதிகரித்து வரும் வரிகளுக்கும் மற்றும் பெருமளவு வேறு பிரச்சனைகளுக்கும் எதிராக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டானில் உள்ள ஒதியமலை கிராமத்தில் 1984இல் இலங்கை ஆயுதப் படையினர் 32 தமிழ் பொதுமக்களைக் கொன்ற ஒதியமலை படுகொலையைக் குறிப்பதற்கான 39ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வைப் பொலிஸார் தடுத்துள்ளனர். ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதற்குத் தேவையான அனுமதிகளைப் பெறவில்லை எனக் கூறி, நிகழ்வை முடித்து வைக்குமாறு ஏற்பாட்டாளர்களுக்கு பொலிஸ் உத்தரவிட்டுள்ளது. மத்திய அதிவேக நெடுஞ்சாலையால் வீடுகள் சேதமடைந்த அண்ணளவாக 600 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் குருநாகல், கட்டுவான நுழைவாயிலுக்கு அருகில் சத்தியாக்கிரகத்தை (அமைதியான போராட்டம்) ஆரம்பித்தனர். போராட்டக்காரர்கள் அவர்களுக்காக கூடாரமொன்றைக் கட்ட முயன்ற போது, கூடாரம் கட்டுவதற்காக கொண்டு வரப்பட்ட பொருட்கள் அனைத்தையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.*

# *6. கருத்துச் சுதந்திரத்தின் அடக்குமுறை*

***மே 2023***

*நாட்டிலுள்ள சில பெண் மேடை நகைச்சுவையாளர்களில் ஒருவரான நடாஷா எதிரிசூரிய, பௌத்த மதத்தை அவமதித்ததாக குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டு ICCPR சட்டத்தினதும் மற்றும் வேறு சட்டங்களினதும் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டார். இதே சம்பவத்துடன் தொடர்புடைய SL Vlogஇன் உரிமையாளர் புருனோ திவாகர கைது செய்யப்பட்டார். இதே நகைச்சுவை நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களிடமும் விசாரணை நடத்தப்பட்டு, அவர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவாக தெரிவித்துள்ளார். 'யூடியூபர்' தர்ஷன ஹந்துங்கொடவை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் வரவழைத்து, எக்ஸ்-பிரஸ் பேர்ள் கடல்பற்று அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பாக அவர் வெளியிட்ட காணொளி தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.*




*பௌத்த மதத்தை அவமதித்த குற்றச்சாட்டில் நகைச்சுவையாளரும் மற்றும் செயலார்வலருமான நடாஷா எதிரிசூரிய கைது செய்யப்பட்டார். பௌத்த துறவிகள் அளித்த பல்-எண்ணிக் கையிலான முறைப்பாடுகளின் அடிப்படையில் அவர் மீது ICCPR சட்டத்தின் கீழ் பொலிஸார் வழக்குப்பதிவு செய்தனர்.*

***ஜூன் 2023***

*தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் (TNPF) தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு எதிராக அரச புலனாய்வு அலுவலர்கள் அச்சுறுத்தியதாக கூறப்படும் சம்பவங்களைக் காணொளி எடுத்ததிற்காக, சுதந்திர ஊடகவியலாளர்களான பிரதீபன் தம்பித்துரை மற்றும் தர்மலிங்கம் ஆகியோரை கிளிநொச்சியில் உள்ள பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தின் விசேட குற்றத்தடுப்பு அலுவலகம் வரவழைத்து, விசாரணை நடத்தியது. அந்தக் காணொளிவை எப்படிப் பெற்றார்கள் அத்துடன் எப்படி அந்தச் செய்திக்கான தகவல்களைச் சேகரித்தார்கள் என்பன குறித்து அவர்களிடம் திரும்பத்திரும்ப கேள்விகள் கேட்கப்பட்டன. கொழும்பின் புறநகர்ப் பகுதியில் நடைபெற்ற மாணவர் போராட்டத்தை நேரலையில் அறிக்கையிடும் போது அல் ஜசீரா செய்தியாளர் மினெல் பெர்னாண்டஸ் நீர்த்தாரைத் தாக்குதலை எதிர்கொண்டார். நடாஷா எதிரிசூரிய கைது செய்யப்பட்டதைக் கண்டித்து ஊடகவியலாளர் மகாநாட்டில் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில், ஊடகவியலாளரும் மற்றும் மனித உரிமைச் செயலார்வலருமான தரிந்து உடுவரகெதர, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் (CID) வரவழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். 2022 ஜூலையில், அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டின் முன் நடந்த போராட்டங்களை நேரடியாக ஒளிபரப்பியதற்காக, மக்கள் போராட்டம் 2022இன் தீவிர உறுப்பினரும் மற்றும் சமூக ஊடகச் செயலார்வலருமான பியத் நிகேஷலாவை CID கைது செய்தது. சமூக ஊடகவியலாளர் பிரசாத் வெலிகும்புர, 2023 பெப்ரவரியில் இராணுவத்திற்கு அவமரியாதையை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் காணொளி தொடர்பில் கணினி குற்றப் பிரிவுக்கு அழைக்கப்பட்டார்.*

# 7. செயலார்வலர்களினதும் மற்றும் தகவலளிப்பவர்களினதும் மீதான அடக்குமுறை

***மே 2023***

*மக்கள் எதிர்ப்பு இயக்கத்தின் தீவிர பங்கேற்பாளரான பியத் நிகேஷலாவை உள்ளூர் அரசியல்வாதி ஒருவரின் தலைமையிலான குழு தாக்கியதுடன், பின்னர் அவர் தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற வேளை கைது செய்யப்பட்டார். மட்டக்களப்பு நரிபுல்தோட்டத்தில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வின் போது, "தமிழர் இனப்படுகொலை நினைவு தினம்" என்ற வாசகம் அடங்கிய பதாகையைக் காட்சிப்படுத்தியதற்காக, மட்டக்களப்பில் உள்ள AHAM மனிதநேய வள நிலையத்தின் ஊழியர் பத்மநாதன் சிரோஜன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். மனித உரிமைகள் சட்டத்தரணியும் மற்றும் செயலார்வலளருமான பிரியலால் சிறிசேனவுக்கு மே 25 அன்று இனந்தெரியாத அழைப்பாளரிடமிருந்து கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது. பௌத்தத்தையும் மற்றும் கலாசாரத்தையும் அழிக்கும் நிகழ்ச்சி நிரலின் அங்கமாக அவர் இருப்பதாகவும் மற்றும் அவரைக் கைது செய்ய பொலிஸாரிடம் கோரியதாகவும் பகிரங்க அறிக்கையொன்றை பலாங்கொட கசப்ப தேரர் என்ற தேசியவாத பிக்கு விடுத்த பின்னர் கொழும்பில் உள்ள சமூக செயலார்வலர் சுஜித் அண்ணாமலை பொலிஸில் முறைப்பாடொன்றைச் செய்தார்.*

***ஓகஸ்ட் 2023***

*ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் மயூரபுரத்தில் விவசாயத் தலைவரும் மற்றும் செயலார்வலருமான ஒருவர் தாக்கப்பட்டு, பலத்த காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதேபோன்ற சம்பவம் ஜூலை பிற்பகுதியில் நிகழ்ந்தது. இவ்விரு சம்பவங்கள் குறித்து உடனடியாக விசாரணை நடத்துமாறு வலியுறுத்தி விவசாயிகள் சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தின் இணைப்பாளர் அமலநாயகியை அவமதிக்கும் வகையில் சுவரொட்டிகள் மட்டக்களப்பு நகரைச் சுற்றிலும் காணப்பட்டன.*

***நொவம்பர் 2023***

*மாவீரர் தின நிகழ்வில் கலந்துகொண்டிருந்த போது ஜனநாயக கட்சியின் தலைவர் என்.நகுலேஸ் விசாரணைக்காக பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டார்.*

# 8. அடக்குமுறை சட்ட மற்றும் கொள்கை நடவடிக்கைகள்

***ஜனவரி 2023***

*சிங்கப்பூரின் தகவல் தொடர்பாடல் ஊடக அபிவிருத்தி அதிகாரசபை [Info-communications Media Development Authority (IMDA)] சட்டம் 2016 போன்று சமூக ஊடகங்களையும் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களையும் ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டமூலம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும் என ஜனவரியில் ஜனாதிபதி செயலகத்தில் ஊடக நிறுவனங்களின் தலைவர்களுடனான சந்திப்பின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.*[47] *பல்வேறு மனித உரிமைகள் அறிக்கைகள், சிங்கப்பூரில் உள்ள நிகழ்நிலை பொய்மை மற்றும் கையாளுதல் சட்டம் [Protection from Online Falsehoods and Manipulation Act (POFMA)] மற்றும் தகவல் தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணைக்குழுச் சட்டம் (IMDA) ஆகிய இரண்டும் கருத்து வேறுபாடுகளை அமைதிப்படுத்தவும் அத்துடன் கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.*[48] *முந்தைய அரசுக்கு எதிரான போராட்டங்கள் அதிகரித்து, விரைவில் அரசு கவிழ்ந்ததால், உத்தேச சட்டமூலம் அப்போது அறிமுகப்படுத்தப்படவில்லை. எனினும், இந்த புதிய சட்டமூலத்தை 2024இல் ஜனாதிபதி விக்கிரமசிங்கவினால் கொண்டு வர முடிந்தது. மின்சாரம் வழங்கல், பெற்றோலியம் மற்றும் எரிபொருள் விநியோகம் மற்றும் பங்கீடு மற்றும் சுகாதாரத் துறைகளின் அனைத்து சேவைகள் ஆகியனவற்றை அத்தியாவசியச் சேவைகளாகப் பிரகடனப்படுத்தும் இரு வர்த்தமானி அறிவிப்புகள் ஜனவரி*[49] *2023இல்*[50] *வெளியிடப்பட்டன.*[51] *அத்தியாவசியச் சேவைகளாகப் பிரகடனம் செய்வது இலங்கையில் தொழிற்சங்க நடவடிக்கைகளை ஊக்கங்கெடுப்பதற்கும் அத்துடன் தடுப்பதற்கும் நன்கு அறியப்பட்ட ஒரு வரலாற்று தந்திரமாகும். இராணுவம் சிவில் விவகாரங்களில் ஈடுபட அனுமதிக்கும் பொது ஒழுங்கைப் பேணுமாறு அனைத்து ஆயுதப்படை உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கும் மாதாந்த வர்த்தமானி அறிவித்தல் ஜனவரி 20 அன்று வெளியிடப்பட்டது. இது பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 40) வழங்கிய அதிகாரத்தின் கீழ் ஜனாதிபதியால் வெளியிடப்பட்டது.*[52]

***மார்ச் 2023***

*1979இன் தற்போதைய கொடூரமான சட்டமியற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை (PTA) பதிலீடு செய்யுமென்பதை எதிர்பார்க்கும் முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (ATA) 17 மார்ச் 2023 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. கருத்து வேறுபாடுகளை ஒடுக்கவும் அத்துடன் கருத்துச் சுதந்திரத்தையும் மற்றும் பிற மனித உரிமைகளையும் கட்டுப்படுத்தவும் பயன்படுத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகளுக்காக மனித உரிமை வழக்கறிஞர்களால் கடுமையான விமர்சனத்திற்கு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உள்ளானது. 2022இல், அரசாங்கத்திற்கு எதிரான போராட்ட இயக்கமான அரகலயவிற்கு நிதியுதவி செய்தவர்கள், உதவி செய்தவர்கள் மற்றும் ஊக்குவித்தவர்கள் ஆகியோர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் அண்மைக்காலமாக கவனம் செலுத்தி வருவதாக செய்திக் கட்டுரை ஒன்றை 'அருண' செய்திப்பத்திரிகை வெளியிட்டுள்ளது. கடந்த மாதங்களைப் போலவே, பொது ஒழுங்கைப் பேணுமாறு ஆயுதப் படைகளுக்கு வர்த்தமானி அறிவிப்பொன்றில் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். இது தற்போதைய இராணுவமயமாக்கலின் அப்பட்டமான அறிகுறியாகும். தபால் சேவைகள், மின்சார விநியோகம், எரிபொருள் மற்றும் பெற்றோலிய உற்பத்திப்பொருட்களின் பங்கீடு ஆகியவற்றை அத்தியாவசியச் சேவைகளாகப் பிரகடனப்படுத்தி இரு வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன. வரலாற்றுரீதியாக, தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தடுக்கும் வழிமுறையாக இந்தப் பிரகடனங்களை அத்தியாவசியச் சேவைகளாக இலங்கையில் உள்ள அடக்குமுறையிலான நிர்வாகங்கள் பயன்படுத்தியுள்ளன. தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக 2 முதல் 5 ஆண்டுகள் வரையிலான கடுங்காவல் சிறைத்தண்டனை, சொத்துக்களைப் பறிமுதல் செய்தல் மற்றும் தொழில்முறைப் பதிவிலிருந்து நீக்குதல் போன்றவற்றை இந்தக் கொடூரச் சட்டம் அனுமதிக்கிறது. அண்மைக்காலமாக இந்தச் சட்டம் அமுல்படுத்தப்படாவிட்டாலும், நியாயமற்ற போராட்டங்களில் ஈடுபட வேண்டாம் என தொழிற்சங்கவாதிகளை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர*

---

[47] http://www.adaderana.lk/news/87400/sri-lanka-to-introduce-new-laws-to-regulate-social-media
[48] https://monitor.civicus.org/updates/2022/12/20/singapore-authorities-continues-its-use-restrictive-laws-harass-critics-and-activists-and-stifle-protests/
[49] http://documents.gov.lk/files/egz/2023/1/2313-25_E.pdf
[50] http://documents.gov.lk/files/egz/2023/1/2315-07_E.pdf
[51] https://www.newswire.lk/2023/01/03/extraordinary-gazette-issued-declaring-three-sectors-as-essential-services/
[52] http://www.documents.gov.lk/files/egz/2023/1/2315-58_E.pdf

*அபேவர்தன எச்சரித்ததுடன், அவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் எனவும் தெரிவித்துள்ளார். ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் வகையில், பாடசாலைக் கல்வியை அத்தியாவசியச் சேவையாகப் பிரகடனப்படுத்தும் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளதாகப் பாடசாலை நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி தெரிவித்தார்.*

***ஏப்ரல் 2023***

*சமூகப் பொறுப்புணர்வுக் கருத்திட்டமாக மைதானத்தை துறைமுக அதிகாரசபை முன்னெடுத்திருப்பதால், எதிர்காலத்தில் காலிமுகத் திடலில் போராட்டங்களுக்கு இடமளிக்கப்படமாட்டாது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். மாதாந்த வர்த்தமானி அறிவிப்பில் ஆயுதப்படைகளால் பொது ஒழுங்கைப் பேணுவதற்கான கோரிக்கை உள்ளது. இது ஒரு மிகப்பெரிய அரச இராணுவமயமாக்கலைக் குறிக்கிறது. மின்சாரம், பெற்றோலியம் மற்றும் எரிபொருள் விநியோகம், தபால் சேவை மற்றும் சுகாதார சேவைகள் ஆகியன அத்தியாவசியச் சேவைகளாக அறிவிக்கப்பட்டன. மருத்துவமனைகளிலும் மற்றும் சுகாதார நிறுவனங்களிலும் கறுப்புக் கொடி காட்டுவதைத் தடை செய்து சுகாதார அமைச்சு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இது போன்ற செயல்கள் நோயாளிகளின் மன ஆரோக்கியத்தை எதிர்மறையாக பாதிக்கும் என சுற்றறிக்கை கூறுகிறது.*

***மே 2023***

*முன்மொழியப்பட்ட ஒலிபரப்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுச் சட்டம் (BRCA) பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களிடையே அச்சத்தைத் தூண்டும் முயற்சி என்று எதிர்க்கட்சி அரசியல் கட்சிகள் விமர்சித்தன. ஊடகவியலாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும், அவர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கவும், அபராதம் விதிக்கவும், உரிமங்களை ரத்து செய்யவும் மற்றும் ஊடக நிறுவனங்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு எதிராக பிற நடவடிக்கைகளை எடுக்கவும் அதிகாரங்களை முன்மொழியப்பட்ட BRCA கொண்டுள்ளது. பெற்றோலிய உற்பத்திப்பொருட்களினதும் மற்றும் எரிபொருளினதும் விநியோகம் மற்றும் பங்கீடு, மின்சார விநியோகம் மற்றும் சுகாதார சேவைகள் ஆகியன அத்தியாவசியச் சேவைகளாகப் பிரகடனப்படுத்தபட்டன. அத்தியாவசியச் சேவைகளை அறிவிப்பது என்பது தொழிலாளர் வேலைநிறுத்தம் போன்ற தொழிற்சங்க நடவடிக்கைகளை ஊக்கங்கெடுப்பதே அரசாங்கத்தின் பொதுவான தந்திரமாகும். மீண்டும், பொது பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்படி, மாதாந்த வர்த்தமானி அறிவிப்பில் இராணுவப் படைகளுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். இது குடிமக்களின் விவகாரங்களில் தலையிட இராணுவத்திற்கு மேலதிகமான அதிகாரங்களை வழங்குகிறது.*

***ஜூன் 2023***

*ஒரு நீதிமன்றத்தை, தீர்ப்பாயத்தை அல்லது நிறுவனத்தை அவமதிக்கும் சட்டம் ஜூன் 27 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. முன்மொழியப்பட்ட சட்டமானது கருத்துச் சுதந்திரத்திற்கும் மற்றும் வேறு உரிமைகளுக்கும் கடுமையான தாக்கங்களைக் கொண்டிருக்கலாம். நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் நீதித்துறை மீதான மக்கள் நம்பிக்கை ஆகியவற்றுக்கு முரணானவையாகக் கருதப்படும் இரு அண்மைய நீதித்துறை நியமனங்கள் தொடர்பில் அதிருப்தி தெரிவித்து ஜனாதிபதிக்கு இலங்கை நீதித்துறைச் சேவைச் சங்கம் [Judicial Service Association of Sri Lanka (JSASL)]கடிதம் ஒன்றை எழுதியுள்ளது. இராணுவமயமாக்கலின் தொடர்ச்சியான போக்குகளைச் சுட்டிக்காட்டும் வகையில், பொது ஒழுங்கைப் பேணுவதற்கு ஆயுதப் படைகளுக்கு அழைப்பு விடுக்கும் மாதாந்த வர்த்தமானி வெளியிடப்பட்டது. மின்சார விநியோகம், எரிபொருள் விநியோகம் மற்றும் பங்கீடு அத்துடன் சுகாதாரம் தொடர்பான பணிகள் ஆகியவற்றை அத்தியாவசியச் சேவைகளாக அறிவித்து, மற்றுமொரு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.*

***ஜூலை 2023***

*சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் அதன் ஊழியர்கள் தங்கள் துறைத் தலைவரின் அனுமதியின்றி ஊடகங்களுக்கு கருத்துக்களை வெளியிட தடை விதிக்கப்பட்டுள்ளது. நாட்டில் குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாடு அபாயகரமான விகிதங்களை வெளிப்படுத்தியதற்காக டொக்டர் ஷமல் சஞ்சீவவின் தடையை உறுதிப்படுத்திய சமீபத்திய மீஉயர் நீதிமன்றத் தீர்ப்பையும் சுற்றறிக்கை குறிப்பிடுகிறது. பல பொதுச் சேவைகளை அத்தியாவசியச் சேவைகளாக மாற்றும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. சிவில் விவகாரங்களில் இராணுவத் தலையீட்டை அதிகரிப்பதற்கான அதிகாரங்களை நியாயப்படுத்தியும், அதிகாரங்களை வழங்கும் வகையிலும் ஜனாதிபதியினால் ஆயுதப்படைகளுக்கு அழைப்பு விடுக்கும் மாதாந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது*

**ஓகஸ்ட் 2023**

இலங்கையில் இராணுவமயமாக்கல் தொடர்வதைச் சுட்டிக்காட்டும் வகையில், கடந்த மாதங்களைப் போலவே ஆயுதப்படைகளுக்கு அழைப்பு விடுக்கும் மாதாந்த வர்த்தமானி அறிவித்தல்

*வெளியிடப்பட்டது. தொழிலாளர் வேலைநிறுத்தங்களில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கும் அத்துடன் ஊக்கங்கெடுப்பதற்கும் ஒரு மூலோபாயமாக பெருமளவு அரசாங்கச் சேவைகள் அத்தியாவசியமானவை என அறிவிக்கும் மற்றொரு வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது.*

***செப்ரெம்பர் 2023***

*பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (ATA) மற்றும் நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் ஆகிய இரு அடக்குமுறை வரைவுச் சட்டங்கள் செப்ரெம்பர் நடுப்பகுதியில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டன. கொடூரமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை (PTA) ATA பதிலீடுசெய்யும் என எதிர்பார்க்கிறது. இதில் தெளிவற்ற, மிகையான சொற்கள், நீடிக்கப்பட்ட தடுப்புக்காவல் காலங்கள், நிறைவேற்று ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகப்படியான அதிகாரங்கள் மற்றும் பொலிஸ் அதிகாரங்களை விரிவுபடுத்துதல் ஆகியன உட்பட குற்றச்சாட்டுகள் இன்றி நீண்ட காலத்திற்கு காவலில் வைக்க அங்கீகாரம் வழங்குதல் ஆகியவை அடங்கும். நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலமானது, தண்டனைக்குரிய குற்றங்கள் மற்றும் தேவையற்ற மற்றும் விகிதாசாரமான தண்டனைத் தடைகள் என குறிப்பிடப்பட்ட தெளிவற்றதும் மற்றும் மிகையானதுமான வார்த்தைகளைக் கொண்டுள்ளதுடன், ஒரு நிகழ்நிலைக் காப்பு ஆணைக்குழுவையும் நிறுவுகிறது. இது நிறைவேற்றுத் தலைவரால் பிரத்தியேகமாக நியமிக்கப்படுவதுடன், எனவே, அதன் சுதந்திரமான செயல்பாட்டில் இன்றிமையாத விதத்தில் சிக்கல்களைக் கொண்டிருக்கும். இரு சட்டமூலங்களும் உள்நாட்டிலும் மற்றும் சர்வதேச அளவிலும் பெருமளவு சிவில் சமூகக் குழுக்களால் கண்டிக்கப்பட்டதுடன், அவை உடனடியாக திரும்பப் பெறப்பட வேண்டும் என்று அழைப்பும் விடுக்கப்பட்டன. புகையிரத ஊழியர்கள் வேலைநிறுத்தத்தை ஆரம்பித்துள்ள சூழலில் அனைத்து போக்குவரத்து சேவைகளையும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது. வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு ரயில்வே திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளதுடன், அவர்கள் பணிக்கு சமூகமளிக்கத் தவறினால் அவர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்படுவார்கள் எனவும் தெரிவித்துள்ளது. மின்சாரம், பெற்றோலியம் மற்றும் சுகாதார சேவைகள் ஆகியன அத்தியாவசியச் சேவைகளாக மற்றொரு வர்த்தமானி அறிவித்தல் பிரகடனப்படுத்தியது. கடந்த மாதங்களைப் போலவே, ஆயுதப் படைகளுக்கு அழைப்பு விடுத்து மாதாந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. இது அதிகரித்து வரும் இராணுவமயமாக்கலையும் மற்றும் குடிமக்கள் இடம் சுருங்கி வருவதையும் குறிக்கிறது..*

***ஒக்ரோபர் 2023***

*ஜனாதிபதியினால் ஆயுதப்படைகளுக்கு அழைப்பு விடுக்கும் மாதாந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. இது நாட்டில் தொடரும் இராணுவமயமாக்கலுக்கு மேலும் சமிக்ஞை காட்டுறது. பெற்றோலிய மற்றும் மின்சார விநியோகத்தை அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து, மற்றுமொரு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. மக்கள் போராட்டங்களின் போது, 2022 ஏப்ரலில் ரம்புக்கனையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க பரிந்துரைத்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவைக் கண்டித்து, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருக்கு கடிதம் ஒன்றைத் தேசியப் பாதுகாப்பு மீதான பாராளுமன்றத் துறைசார் மேற்பார்வைக் குழு சமர்ப்பித்து, ஊடகங்களுக்கு கருத்துரைத்தது.*

***நொவம்பர் 2023***

*தபால் சேவை ஊழியர்களால் தொழிற்சங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள சூழலில், தபால் சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. அத்தியாவசிய சேவை அறிவிப்புகள் பொதுவாக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் தொழிலாளர்களை ஒடுக்கவும் அத்துடன் மிரட்டவும் பயன்படுத்தப்படுகின்றன. உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், நொவம்பர் 8, 9, 10 ஆகிய தினங்களில் அனைத்து தபால் ஊழியர்களின் லீவைத் தபால் திணைக்களம் இரத்து செய்தது. நுவரெலியா மற்றும் கண்டி தபால் அலுவலகக் கட்டிடங்களை விற்பனை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து தபால் ஊழியர்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்த போதே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மின்சார விநியோகம் மற்றும் பெற்றோலிய உற்பத்திப்பொருட்களினதும் மற்றும் எரிபொருளினதும் விநியோகம் மற்றும் பங்கீடு ஆகியவற்றுடன் இணைக்கப்பட்ட அனைத்துச் சேவைகளும் அத்தியாவசியமானவை எனப் பிரகடனப்படுத்தி இன்னொரு வர்த்தமானி வெளியிடப்பட்டது. சிவில் விவகாரங்களில் ஆயுதப்படைகள் தலையிடும் அதிகாரங்களை வழங்கும் வகையில் அனைத்துப் படைகளுக்கும் பொது பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தை பின்பற்றும் வகையில் மாதாந்த வர்த்தமானி வெளியிடப்பட்டது. புதிய தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் தொடர்பான அறிக்கையை தேசிய சமாதானப் பேரவை வெளியிட்டுள்ளது. சனசமூக அடிப்படையிலான அமைப்புகள் உட்பட உள்ளூர் அமைப்புகளால் நடத்தப்படும் அமைதிக்கும் மற்றும் நல்லிணக்கத்திற்குமான திட்டங்களைக் கண்காணிக்கவும் அத்துடன் வசதிப்படுத்தவும் ONURக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் குறித்து அவர்கள் கரிசனைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.*

# *9. அரச அலுவலர்களின் அடக்குமுறை*

***ஏப்ரல் 2023***

*2022இல் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்குப் பின்னால் பெரும் சதி இருப்பதாக வலியுறுத்திய முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டீ லிவேராவின் கூற்று தொடர்பில் வாக்குமூலம் பதிவுசெய்வதற்காக பொலிஸின் TIDக்கு அவர் வரவழைக்கப்பட்டார். ஏனைய உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு எதிராக தனது விருப்பப்படி HRCSLஇன் தலைவரான ஓய்வுபெற்ற நீதியரசர் ரோகினி மாரசிங்க செயற்பட்டதாகக் கூறி, ஜனாதிபதியுடனான சந்திப்பொன்றைக் கோரி HRCSLஇன் மூன்று ஆணையாளர்கள் கடிதம் ஒன்றை எழுதினர். எனினும், முக்கியமாக விசாரணைகளுக்கு உயர் மட்ட அரசியல்வாதிகளையும் மற்றும் அரச அதிகாரிகளையும் வரவழைத்தமையே தலைவருக்கு எதிரான அவர்களின் விமர்சனங்கள் என்பதுடன், அவை அரசாங்கத்திற்கு ஆதரவானவை மற்றும் அரசியல் உள்நோக்கம் கொண்டவை எனத் தெரிகிறது. இடதுசாரி அரசியல் கட்சியான தேசிய மக்கள் சக்தி (NPP) நடத்திய போராட்டத்தில் கலந்து கொண்ட பொலிஸ் அலுவலர் ஒருவர் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார். சிவில் உடையில் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வதற்காக அவர் தனது கடமைகளில் இருந்து விடுப்பு எடுத்திருந்தார்.*

***மே 2023***

*போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இனந்தெரியாத மூன்று ஆண்கள் கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் சிறை அலுவலர் ஒருவரை அவரது மினுவாங்கொடை இல்லத்தில் வைத்து தாக்கி கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். சிறைச்சாலை வளாகத்தில் போதைப்பொருள் கடத்தலுக்கு இடையூறு செய்யக்கூடாது என அவருக்கு மிரட்டல் விடுக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. மே 24 அன்று, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் [Public Utilities Commission of Sri Lanka (PUCSL)] தலைவர் ஜானக ரத்நாயக்கவை அப்பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.*

***ஓகஸ்ட் 2023***

*புதிய விகாரையொன்றை நிருமாணிப்பதற்கு அனுமதி வழங்குமாறு கோரி பௌத்த பிக்குகள் குழுவொன்று மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அலுவலர்களை அச்சுறுத்தியது. பாராளுமன்றத்தில் கடும்போக்கு தேசியவாத பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர பேசுகையில், சர்ச்சைக்குரிய குருந்தூர் மலை தொல்பொருளியல் அமைவிடத்தில் இந்துக்கள் மதச் சடங்குகளை நடத்த அனுமதித்த நீதவானை இடமாற்றம் செய்யுமாறு கோரினார்.*

***ஒக்ரோபர் 2023***

*பொதுப் பயன்பாட்டுக் கட்டண அதிகரிப்புக்கு அனுமதி வழங்க மறுத்தமை உட்பட பல விடயங்களில் அரசாங்கத்துடன் உடன்படாத நிலையில், 2023 மே மாதம் அவரது பதவியில் இருந்து நீக்கப்பட்ட பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க மரண அச்சுறுத்தல்களுடனும் மற்றும் கப்பத்தைக் கோரியும் தொலைபேசி அழைப்பொன்றைப் பெற்றார்.*

***டிசம்பர் 2023***

*குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (CID) முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவை கார் விபத்தொன்றில் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டதாக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதால், தனக்கு போதிய பாதுகாப்பை வழங்குமாறு பொலிஸ் மா அதிபருக்கும் (IGP) மற்றும் ஏனைய பிரதிவாதிகளுக்கும் உத்தரவிடுமாறு கோரி, ஷானி அபேசேகர தாக்கல் செய்த எழுத்தாணை மனுவைத் தொடர்ந்து இந்த விசாரணை நடத்தப்பட்டுள்ளது. அரசியல்வாதி ஒருவருக்குச் சொந்தமானதெனக் கூறப்படும் நீர்கொழும்பு அவென்ரா கார்டன் ஹொட்டேலில் சமையல் அறைகளை ஆய்வு செய்த 5 பொதுச் சுகாதார பரிசோதகர்கள், அவர்களின் செயலுக்கு பழிவாங்கும் வகையில் பொலிஸுக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர்.*

# *10. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்*

***ஜனவரி 2023***

*அவர்களது பதவிகளில் இருந்து விலகக் கோரி மூன்று தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் கொலை மிரட்டலைப் பெற்றனர். அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில், தேர்தல் வேட்பாளர்களிடம் இருந்து வைப்புத்தொகை பெறுவதைத் தவிர்க்குமாறு மாவட்டச் செயலாளர்களுக்கு அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் கடிதம் ஒன்றை விடுத்துள்ளார். இலங்கையில் பொருளாதார நெருக்கடிநிலையின் போது, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு எதிராக ஓய்வுபெற்ற இராணுவ கேணல் ஒருவர் எழுத்தாணை மனுவொன்றைத் தாக்கல் செய்தார். வாரியபொலவில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகம் மீது அவர்களது அரசியல் எதிரிகளால் பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.*

***பெப்ரவரி 2023***

*நிதி நெருக்கடிநிலையை மேற்கோள்காட்டி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நிதியமைச்சர் என்ற வகையில், தேர்தல் தொடர்பான செலவினங்களைத் தவிர்த்து, அத்தியாவசியச் சேவைகளின் பட்டியலில் செலவினங்களைக் கட்டுப்படுத்துமாறு அரசாங்கத்தை அறிவுறுத்தும் சுற்றறிக்கைகளை வெளியிட்டார். அதனையடுத்து, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தேவையான நிதியை விடுவிப்பதில் உள்ள சிரமங்கள் பற்றி தேசிய தேர்தல் ஆணைக்குழுவிடம் [National Election Commission (NEC)] நிதி மற்றும் திறைசேரி அமைச்சின் செயலாளர் அறிவித்தார். எனினும், பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படாததாலும் அத்துடன் அதற்குத் தேவையான நிதி கிடைக்காததாலும் தபால் வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அரசாங்க அச்சாளர் தெரிவித்துள்ளார். மீஉயர் நீதிமன்றத்தில் சிறப்புப் பிரேரணையைத் தாக்கல் செய்த NECஆனது தேவையான நிதியை அரசாங்கம் ஒதுக்கத் தவறியதன் காரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரிய நேரத்தில் நடத்த இயலாமை குறித்து நீதிமன்றத்திற்கு அறிவித்தது. இதனையடுத்து, தபால் மூல வாக்களிப்பு மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டது.*

# *11.* வேறு

***ஜனவரி 2023***

*உயர்தரப் பரீட்சைகளின் போது தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கான உத்தரவை இலங்கை மின்சாரச் சபை அலுவலர்களிடம் பலவந்தமாகப் பெற்றுக்கொண்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை கோரியுள்ளதாக மின் சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.*

*நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள சில தொழிற்சங்கங்களையும் மற்றும் மாணவர் தொழிற்சங்கங்களையும் பயங்கரவாதிகள் என அழைக்கலாம் என ராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்துள்ளார். ஆணைக்குழுவின் நிலைப்பாட்டை மாற்றுவதற்கு தமது ஆட்சேபனையைக் காட்டுவதற்காக வேறு சிவில் சமூகச் செயலார்வலர்களுடன் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு [Public Utilities Commission of Sri Lanka (PUCSL)] சென்ற இரு தொழிற்சங்கவாதிகள் PUCSL உறுப்பினர்களை அச்சுறுத்தியதாகக் கூறி பின்னர் கைது செய்யப்பட்டனர். 'யூடியூபர்' செப்பல் அமரசிங்க, கண்டியில் உள்ள பல்லக்கு ஆலயம் குறித்து அவதூறான கருத்துக்களை வெளியிட்டதற்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை [International Covenant on Civil and Political Rights (ICCPR)] சட்டத்தின் 3ஆவது பிரிவின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டார்.*

*அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தின் போது, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு [Sri Lanka Broadcasting Corporation (SLRC)] வலுக்கட்டாயமாக பிரவேசித்த குற்றச்சாட்டில் செயலார்வலரான ரண்டிமல் கமகே கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த வேளை இலங்கைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். மேல் மாகாணத்திற்கு பொறுப்பான SDIG தேசபந்து தென்னக்கோனால் தமக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும், ஜனாதிபதியின் வீட்டில் கிடைத்த பணத்தை நீதிமன்றக் காவலில் வைக்காமல் அமைச்சர் ஒருவருக்கு கையளிப்பதற்கு தென்னக்கோனின் தேவையற்ற செல்வாக்கு குறித்து அவர் நீதிமன்றத்தில் தெரிவித்தமைக்கு பதிலளிக்கும் வகையில் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் SSP டி.எஸ்.விக்கிரமசிங்க கோட்டை நீதவானிடம் தெரிவித்தார்.*



*சிறைச்சாலை அலுவலர்களால் செப்பல் அமரசிங்க நீதவான் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட வேளையில். புகைப்பட உபயம்: கயான் புஷ்பிகா, டெய்லி நியூஸ் வழியாக*

***பெப்ரவரி 2023***

*அரசாங்கத்திற்கு எதிராக சட்டத்திற்குப் புறம்பான செயல்களை மேற்கொண்டதாக சார்த்துரைக்கப்படும் பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் [Public Utilities Commission (PUCSL)] முன்னாள் தலைவர் ஜனக*

*ரத்நாயக்கவின் அலுவலகத்திற்கு பொலிஸார் பொறி வைத்துள்ளனர். அவர்களின் சோதனைக்கு இரு நாட்களுக்கு முன்பு, PUCSLஇன் ஒப்புதல் செயல்முறைக்கு செல்ல வேண்டிய மின்சாரக் கட்டணங்களை அரசாங்கம் சமீபத்தில் உயர்த்தியதை தலைவர் ஏற்கவில்லை என்பதுடன், ஒரு மாற்று முறையை முன்மொழிந்திருந்தார்.*

*அரச புலனாய்வுச் சேவைகள் [State Intelligence Services (SIS)] தலைமையகத்தில் தகவல் அறியும் உரிமைக் கோரிக்கையை செயலார்வலர் சிரந்தன அமரசிங்க கையளிக்கும் போது கைது செய்யப்பட்டதுடன், கறுவாத்தோட்டப் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த வேளையில் சித்திரவதை செய்யப்பட்டதாகச் சார்த்துரைக்கப்படுகிறது.*

*அத்தியாவசியச் சேவைகளைப் பிரகடனப்படுத்தி, இரு வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன. பொது ஒழுங்கைப் பேணுவதற்கு ஆயுதப் படைகளுக்கு அழைப்பு விடுக்கும் மாதாந்த வர்த்தமானி முந்தைய மாதத்தைப் போலவே வெளியிடப்பட்டது. இது சிவில் விவகாரங்களில் தலையிட இராணுவத்திற்கு அதிகப்படியான அதிகாரத்தை வழங்குகிறது.*

***மார்ச் 2023***

*ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தா உட்பட மூன்று ஓய்வுபெற்ற இராணுவ அலுவலர்கள், தமது கட்சியுடன் இணைந்து அரசியலில் ஈடுபட்டதற்காக இலங்கை விமானப்படையால் [Sri Lanka Air Force (SLAF)] கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். பெருமளவு முன்னாள் இராணுவ ஆளணியினர் அரசியலில் ஈடுபட்டு, ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களுக்கு கிடைக்கும் வசதிகளை அனுபவித்து வருவதனால், அவர்களது அரசியல் கருத்தின் அடிப்படையில் முன்னாள் இராணுவ அலுவலர்களைக் கறுப்புப் பட்டியலில் சேர்ப்பது அல்லது சிறப்புரிமைகளைக் கட்டுப்படுத்துவது பாரபட்சமானது என திஸாநாயக்க சுட்டிக்காட்டினார்.*

***ஏப்ரல் 2023***

*காலாவதியான கண்ணீர்ப்புகைகளால் அதற்கு வெளிப்பட்ட மக்களுக்கு எந்தப் பெரிய தீங்கும் ஏற்படவில்லை, ஆனால் அதன் செயல்திறனை அது இழந்திருக்கலாம் என வலியுறுத்தி போராட்டங்களைக் கட்டுப்படுத்த காலாவதியான கண்ணீர்ப் புகைக்குண்டுகளைப் பயன்படுத்துதல் குறித்து பொலிஸார் விளக்கம் அளித்தனர். எதிர்ப்பாளர்களின் சமீபத்திய மரணத்திற்கும் மற்றும் கண்ணீர்ப் புகைக்குண்டு வெளிப்பாட்டிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று அவர்கள் மறுத்தனர்.*

*மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சாணாக்கியன் இராசமாணிக்கத்திற்கு எதிராக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரான பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார இனவாதக் கருத்துக்களை வெளியிட்டார். பாராளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் கேள்வி எழுப்பியதையடுத்து, அதற்கு பதிலளித்த பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார நிதானம் இழந்து, பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கத்தை நோக்கி 'கொட்டியா' எனக் கத்திய போது, பாராளுமன்றத்தில் சூடான சூழ்நிலை தோன்றியது (தமிழீழ விடுதலைப் புலிகளை சிங்களம் பேசுவோர் 'கொட்டி' என அழைக்கும் விரும்பத்தகாத வரலாறொன்று உள்ளது. சில சமயங்களில் இனத்துவத் தமிழர்களை வாய்மொழியாகத் தொந்தரவு செய்வதற்கு இந்தப் பதம் பயன்படுத்தப்படுகின்றது).*

***மே 2023***

*முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், நாடு கடத்தப்பட்ட மதத் தலைவர் போதகர் ஜெரோம் பெர்னாண்டோ உடல்ரீதியாகத் தாக்கப்படுவார் என அச்சுறுத்தியதுடன், அவர் வெளிநாட்டுச் சதியின் ஓர் அங்கம் எனக் குற்றஞ்சாட்டினார். இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, வெளிநாட்டில் தங்கியிருந்த போதகர் ஜெரோம் பெர்னாண்டோவை உடல்ரீதியாகத் தாக்குவதாக அச்சுறுத்தியதுடன், அவர் வெளிநாட்டுச் சதியில் ஈடுபட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார். வெறுப்பையும் மற்றும் இன முரண்பாடுகளையும் ஏற்படுத்தியதற்காக ஜெரோம் போன்றவர்களை நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்றும், சில அரசியல்வாதிகளும் மற்றும் அவர்களது உறவினர்களும் அவரைப் பின்பற்றுபவர்கள் என்றும் சில்வா மேலும் குறிப்பிட்டார். பௌத்தத்தையும் மற்றும் கிறிஸ்தவத்தையும் ஒப்பிட்டு சர்ச்சைக்குரிய கருத்தை போதகர் ஜெரோம் வெளியிட்டதுடன், அறிவொளி பெற்ற புத்தர் ஒளியைத் தேடிய வேளை, இயேசு கிறிஸ்து ஒளியாக இருப்பதால் கிறிஸ்தவத்திற்கு அதிக மதிப்பு கொடுக்கப்பட வேண்டும் என்று கூறியிருந்தார். இது சமூக ஊடகங்களிலும் மற்றும் வெளியேயும் ஜெரோமை குறிவைத்து பெருமளவு*

வெறுப்பு உரைகளுக்கு வழிவகுத்ததுடன், அவரைக் கைது செய்து, ICCPR சட்டத்தின் பிரிவு 3இன் கீழ், "பாகுபாடு, விரோதம் அல்லது வன்முறை ஆகியவற்றைத் தூண்டும் தேசிய, இன அல்லது மத வெறுப்புக்காக வாதாடுவதாக" குற்றச்சாட்டுக்கள் தாக்கல் செய்யப்பட வேண்டும் எனப் பலரும் கூறினர். நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்து, தன்னைக் கைது செய்வதைத் தடுக்க உத்தரவிட வேண்டும் என்று அவர் கோரியிருந்தார். 'நாட்டில் மத நல்லிணக்கத்திற்கு எதிரான அவரது வெறுப்பூட்டும் கருத்துக்கள்' தொடர்பாக போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு எதிராகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக மே 24 அன்று நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் அறிவித்தார்.

***ஜூன் 2023***

கொழும்பு மாவட்டத்தில் பத்தரமுல்லை கூட்டுறவுக் காப்புறுதி நிறுவனத்தின் தலைவராகப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தர்ஷன சமரவிக்ரம, கடமைகளைப் பொறுப்பேற்கச் சென்று கொண்டிருந்த போது இனந்தெரியாத இருவரால் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார். கெப்பித்திகொல்லாவ நீதவான் நீதிமன்றத்தில் கடமையாற்றும் சட்டத்தரணி ஒருவர் பணி முடிந்து திரும்பிய வேளை இருவரினால் தாக்கப்பட்டுள்ளார். தனது கவிதைகள் மூலம் தீவிரவாதத்தை ஊக்குவித்ததாக கூறி அநியாயமாகக் கைது செய்யப்பட்டு, ஓராண்டுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த கவிஞர் அஹ்னாப் ஜசீம் மீண்டும் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய நபர்களின் பட்டியலில் பாதுகாப்பு அமைச்சினால் சேர்க்கப்பட்டுள்ளார்.

***ஜூலை 2023***

ஜனவரியில் ஜனாதிபதி மாளிகையில் கண்டெடுக்கப்பட்ட பணத்தைப் பொது பாதுகாப்பு அமைச்சரிடம் ஒப்படைக்காததற்காக மேல் மாகாண DIGஇனால் அச்சுறுத்தப்பட்டதாகக் கூறப்படும் பொலிஸ் விசேட புலனாய்வு அலகின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.எஸ்.விக்ரமசிங்க பொலிஸ் திணைக்களத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளராக உடனடியாகச் செயற்படும் விதத்தில் இடமாற்றப்பட்டுள்ளார். 2022 ஜூலையில், அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் உத்தியோகபூர்வ ஜனாதிபதி இல்லத்தைக் கைப்பற்றிய போது, ஜனாதிபதியின் வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட 17.5 மில்லியன் இலங்கை ரூபா பணத்தை அவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். ராஜபக்ச குடும்பத்துடன் பலமான தொடர்புகளைக் கொண்ட DIG தேசபந்து தென்னக்கோன், SIU பணிப்பாளரிடம் பணத்தை பொலிஸுக்குப் பொறுப்பான பொது பாதுகாப்பு அமைச்சர் திரான் அலஸிடம் ஒப்படைக்குமாறு அறிவுறுத்திய போதிலும், அவர் அதற்குப் பதிலாக நீதிமன்றத்திற்கு பணத்தைக் கையளித்தார். சிரேஷ்ட பொலிஸ் அலுவலரின் அறிவுறுத்தல்களுக்குக் கீழ்ப்படியாமைக்காக SIU பணிப்பாளரின் இடமாற்றம் பழிவாங்கும் செயலா என்பது குறித்து Sri Lanka Brief மற்றும் பிற இணையத்தளங்கள் சந்தேகம் வெளியிட்டன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய மாநகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தமது கட்சி ஆதரவாளர்களை துன்புறுத்துபவர்கள் பழிவாங்கப்படுவதற்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும் எனத் தெரிவித்தார்.

***ஓகஸ்ட் 2023***

வடக்கிலும் மற்றும் கிழக்கிலும் அரச அனுசரணையிலான பௌத்த ஆலய நிர்மாணங்களுக்கு எதிராக வாதிட்ட யாழ்ப்பாணம் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பில் உள்ள இல்லத்தை சிங்களத் தேசியவாத அரசியல்வாதிகளையும் மற்றும் அவர்களது ஆதரவாளர்களையும் கொண்ட குழுவொன்று சுற்றி வளைத்தது. வடக்கிலும் மற்றும் கிழக்கிலும் உள்ள பௌத்த விகாரைகளுக்கு சேதம் விளைவிப்பவர்களின் தலையை வெட்டுவோம் எனப் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா மிரட்டல் விடுத்தார்.

அ.சா.அ. செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்படாத அரச சார்பற்ற அமைப்புக்கள் எதிர்காலத்தில் தடைசெய்யப்படும் என பொது பாதுகாப்பு அமைச்சர் திரான் அலஸ் எச்சரித்துள்ளார்.

***செப்ரெம்பர் 2023***

முல்லைத்தீவு நீதவானாக பதில் கடமையாற்றிய முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி டி.சரவணராஜா, தனது உயிருக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் காரணமாக தனது பதவியை இராஜினாமா செய்த பின்னர் நாட்டை விட்டு வெளியேறினார். கடந்த மாதம் நீதிபதி சரவணராஜாவை குறிவைத்து அரசியல்வாதி ஒருவர் சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டார்.

***ஒக்ரோபர் 2023***

*பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க, 2023 மே மாதம் தனது பதவியில் இருந்து நீக்கப்பட்ட பொதுப் பயன்பாட்டுக் கட்டண அதிகரிப்புக்கு அனுமதி வழங்க மறுத்தமை உள்ளிட்ட பல விடயங்களில் அரசாங்கத்துடன் உடன்படாத நிலையில், அவருக்கு கொலை மிரட்டல் விடுத்து கப்பம் கோரும் தொலைபேசி அழைப்பு வந்தது.*

***நொவம்பர் 2023***

*கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் குடும்பங்களுக்கு உணவு வழங்கியதிற்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) கீழ் கைது செய்யப்பட்ட ஜனநாயகத்திற்கான சிலுவைப்போர் கட்சியின் துணைத் தலைவர் என்.நகுலேஸ் டிசம்பர் 7 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். குறித்த பகுதியில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*கைது செய்யப்பட்டமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஆர். சாணாக்கியன் பேசுகையில், "இது ஒரு பாரதூரமான, பாரதூரமான பிரச்சினை. வடக்கிலும் மற்றும் கிழக்கிலும் நினைவேந்தல் அனுமதிக்கப்படாவிட்டால், நல்லிணக்கம் இல்லை. TRC (உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு) இயங்காது!" எனத் தெரிவித்தார்.*

***டிசம்பர் 2023***

*சட்டத்தரணிகளை போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்புபடுத்தி பொது பாதுகாப்பு அமைச்சர் திரான் அலஸ் வெளியிட்ட அறிக்கையை சட்டத்தரணிகளின் தொழிற்சங்கங்கள் கடுமையாகக் கண்டித்தன. முகநூல் பக்கத்தையும், 'பூஸ் புத்தா' ('பூனைப் புத்தா' என்று தளர்வாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) மற்றும் 'புஸ் புத்தரைப் பின்பற்றுபவர்கள்' என்ற தலைப்பில் குழுவையும் நடத்திய இளைஞர் ஒருவர் டிசம்பர் 21இல் கைது செய்யப்பட்டு, ஜனவரி 4 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். மாதவனையில் சிங்கள குடியேற்றவாசிகள் தனது பசுவைச் சுட்டுக் கொன்றதாக தமிழ் கால்நடைப் பண்ணையாளர் ஒருவர் செய்த முறைப்பாட்டை வாழைச்சேனைப் பொலிஸார் தாக்கல் செய்ய மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*